

# ஞானச்சுடர்

ஆவணி

மலர் 2006



ஸ்ரீ

முருகா

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை



உ

## குறள்வழி

**பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்**
**கருமமே கட்டளைக் கல்.**

**பொருள்:** மக்கள், தாம் அடையும் பெருமைக்கும் சிறுமைக்கும் உரைகல்லாவது அவரவர் செயல்களே. (505)



## நற்சிந்தனை

**பொன்னடியைப் போற்றுதுமே**

[illegible]

ஈரவார் சடையானை இளமதியை யணிந்தானை
மாரனைக் காய்ந்தானை மங்கையிடம் வைத்தானைத்
தாரமரும் மார்பானைச் சங்கரனைத் தாணுவை
ஆர்வமொடு துதிப்பார்கள் ஆனந்தம் பெறுவாரே

என்னுயிருக் குயிரானை யெரியேந்து மியல்பானை
மன்னுயிர்க ளெல்லாமாய் மருவிநின்ற திறலானைப்
பொன்னொடு மெய்ப்பொருளானைப் போக்குவர வில்லானை
உன்னுபவ ருலகத்தி லினிப்பிறப்ப தொழிந்தாரே

# ஞானச்சுடர்



வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டு பேரவை

# ஞானச்சுடர்

வெளியீடு – 2 சுடர் – 104

## 2006 ஆவணி பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| விநாயக வழிபாடு | ச. துஷ்யந்தி | 1 - 3 |
| தான் ஆடாவிட்டாலும் தன் தசை... | மூ. சிவலிங்கம் | 4 - 5 |
| அப்பர் சுவாமிகளின் பத்து.... | க.ந. பாலசுப்பிரமணியம் | 6 - 7 |
| அருணகிரிநாத சுவாமிகள் | S.S. ரஜீந்திரன் | 8 - 11 |
| கோவிலும் நாமும் | அ. கந்தையா | 12 - 13 |
| உலகெலாம் தேடியும் காணேன் | சிவ சண்முகவடிவேல் | 14 - 15 |
| இறைவன் இருக்குமிடம் | கு. நவரத்தினராஜா | 16 - 17 |
| நலமளிப்பான் முருகன் | நயினை விஜயன் | 18 - 19 |
| சீவன் முத்தர் தவத்திரு... | வி. விசாலாட்சி | 20 -21 |
| முன்னோர் சொன்ன கதைகள் | சி. யோகேஸ்வரி | 22 - 24 |
| மானுடவாழ்வின் மகத்துவம் | முருகனடியான் | 25 - 26 |
| இந்துமதப் பண்பாட்டில் விநாயக... | T. நாகராசா | 27 - 28 |
| சந்நிதியான் | ந. அரியரத்தினம் | 29 - 32 |


**அன்பளிப்பு:-**

மலர் ஒன்று 30/= ரூபா

வருடச்சந்தா தபால்செலவுடன் 385/= ரூபா

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இலக்கம்:- 021– 2263406

பதிவு இல. Q.D./33/NEWS/2006



**அச்சுப்பதிப்பு:- சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு.**

உ

# ஞானச்சுடர்
# ஆடிமாத வெளியீடு

**வெயீட்டுரை:-**

ஞானச்சுடரின் ஆடிமாத வெளியீட்டினை இளைப்பாறிய ஆசிரியருமாகிய திரு த. கந்தசாமி அவர்கள் நிகழ்த்தினார்கள். ஆச்சிரமத்தினதும் பேரவையினதும் பொதுவான செயற்பாடுகள் பற்றி குறிப்பிட்ட திரு கந்தசாமி அவர்கள் இவற்றை எல்லாம் சாதாரணமாக யாரும் செய்யமுடியாதென்றும் இவ்வாறான மகத்தான பணிகளை சந்நிதியானின் திருவருளின் உதவியுடனேயே மேற்கொள்ளப்படுகிறதெனவும் எடுத்துக்காட்டினார்கள்.

ஞானச்சுடர் சஞ்சிகை சைவமக்களுக்கு தனித்துவமான பணிகளை ஆற்றிவருவதை அதனைப் பயன்படுத்துபவர்கள் நன்கு அறிவார்கள் எனவும். இதனை அனைவரும் பயன்படுத்துவதன் மூலம் இதன் சிறப்பை விளங்கிக் கொள்ளமுடியும் எனவும் குறிப்பிட்டார்கள்.

**மதிப்பீட்டுரை:-**

மதிப்பீட்டுரையை இளை கிராமசேவையாளரும் பண்டிதருமாகிய திரு இ. சுப்பிரமணியம் அவர்கள் நிகழ்த்தினார்கள். இங்கே மேற்கொள்ளப்படும் பணிகளில் மிகவும் மகத்தான பணி ஞானச்சுடர் சஞ்சிகை எனவும். இதன் பயனையும் சிறப்பையும் மதிப்பிடமுடியாதளவுக்கு இது பெறுமதி வாய்ந்தது எனவும் குறிப்பிட்டார்கள்.

ஆச்சிரமம் செய்துவருகின்ற பல்வேறு பணிகளுக்கு மத்தியில் ஞானச்சுடரையும் தவறாது வெளியிடுவது இவர்களின் தளராத செயற்பாடுகளுக்கு ஒரு உதாரணமாக இருப்பதையும் சுட்டிக்காட்டினார்கள்.

கட்டுரைகளை எழுதுகின்றவர்களுக்கு ஒரு ஊக்கத்தையும் சந்தர்ப்பத்தையும் வழங்கும் வகையில் ஞானச்சுடர் சஞ்சிகை வெளிவந்துகொண்டிருக்கிறது எனக்குறிப்பிட்டு எழுத்தாளர்களும் இந்த வகையில் பயனடைகின்றனர் என்ற கருத்தையும் வெளிப்படுத்தினார்கள். ஞானச்சுடரில் இடம்பெற்ற கட்டுரைகளை சுருக்கமாக மதிப்பீடு செய்து தனது மதிப்பீட்டுரையை நிறைவு செய்தார்கள்.

சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப்பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

காசுக்கட்டளை
**செ. மோகனதாஸ்**
**சந்நிதியான் ஆச்சிரமம்,**
**தொண்டைமானாறு.**
*T.P. NO. 021-2263406*

காசோலை
**செ. மோகனதாஸ்**
**க.இல. P. 7481**
**இலங்கை வங்கி,**
**பருத்தித்துறை.**

**www. sannithiyan. org**

உ
சிவமயம்



ஸ்ரீ செல்வச்சந்நிதி வேலவனது உற்சவ
காலங்களில் சந்நிதியானைத் தரிசிக்கவந்த அடியார்களின்
நலன் கருதி ஆச்சிரமத்தின் தலையாய பணியாகிய நித்திய
அன்னதானப் பணி முதற்கொண்டு மற்றும்
சகலபணிகளுக்கும் தங்களால் இயன்ற ஆதரவுகளை வழங்கி
ஆச்சிரமத்தின் செயற்பாட்டை திறம்பட நடாத்துவதற்கு
சகல வகைகளிலும் ஒத்துழைப்புத்தந்த அனைவருக்கும்
எமது நன்றியைத் தெரிவிப்பதற்கு
கடமைப்பட்டுள்ளோம்.

எம்மால் மேற்கொள்ளப்படும் நித்திய அன்னப்பணியின்
மூலம் வரும் நிதியினைக் கொண்டுதான் அன்னப்பணியினை
ஆற்றுவதோடு பலவகையான சமய, சமுதாயப் பணிகளை
மேற்கொண்டு வருகின்றோம். இவ்வகையில் ஆச்சிரமத்தின்
வளர்ச்சிக்கு சகல வகைகளிலும் ஆதரவு நல்கும் அன்பர்கள்,
அடியார்கள் எல்லா நலமும்பெற்று வாழ சந்நிதி
வேற்பெருமானை வேண்டுவதோடு குருவருளும்
திருவருளும் கிட்டவேண்டும் எனப்
பிரார்த்திக்கின்றோம்.
சுபம், சாந்தி.

குருபணியில்
செ. மோகனதாஸ்

உ

# செல்வச்சந்நிதி எழுந்தருளும் நல்வடிவேற் பெருமான்

கந்தனே சங்கரன் மைந்தனே ஐங்கர
ஆனைமுகன் அருமைத் தம்பியே
காலைமுதல் மாலைவரை கட்டியவிருட் சாமத்துக்
கால மெல்லாம் தொழுவேன் யானே
எந்தையே யுந்தனது மைந்தன்யான் ஆதலின்
இனியவென துளக் கோயிலில்
இருத்திட வேண்டியே எனது புலன் முதலிய
இடாகளலை யாதொதுக்கினேன்
அந்தநற் கோயிலன்றி எந்தநற் கோயிலிலும்
அன்பினுனை யேத்திப் போற்றுவேன்
ஆனாலு மென்னடிய னிவனென்று என்னைநீ
அறிந்து நோக் காத தேனோ?
பந்தமில் லடியவரின் சிந்தைநிறை கின்றதிருப்
பாலவடி வேல் முருகனே
பகருநின் திருவடியை உருகிநிதம் ஏத்தெனது
பாக்கியமே காட்சி தருவாய்.

முருகா வா மூவிரு முகத்தவா பன்னிருகை
முதல்வ சிவ குமரா வா வா
முன்பரங் குன்றினொடு செந்தூரின் முருகா வா
திருப்பழநி முருக வா வா
திருநிறை யேரக முருகா வா குன்றெலாம்
தேடி யாடு முருக வா வா
தேமதுரப் பழமுதிர் சோலைமுரு காவாவா
சீரெட்டுக் குடிமுருக வா வா
பெருமாவை முருகவா பேர்நல்லை முருகவா
பெட்பின்கந் தவனமுருகா வா
பிறங்கிணுவை முருகவா கதிர்காம முருகவா
பேறாயடி யேன் பாடிடும்
அருளான சந்நிதியின் முருகா வா அன்றுமுதல்
அற்புதங் காட்டுமுருகா வா
அன்னதா னப்பணியை மன்னிநித முலகேத்த
அருளுந் திருமுருக வருகவே.

*முதுபெரும்புலவர்*
*கலாபூஷணம், ஆசிரியர்*
*வை. க. சிற்றம்பலவனார்*

உ



# விநாயக வழிபாடு

செல்வி துஷ்யந்தி சந்திரகுலம் அவர்கள்

எக்கருமத்தையும் ஆற்றுமுன் நாம் முதலில் விநாயகரை வழிபடுதல் கருமங்கள் தடையின்றி நிறைவேற வேண்டும் என்பதற்காகவேயாம். விநாயக வழிபாட்டின் தோற்றம் வளர்ச்சி பற்றிச் சிவபுராணம், மச்சயபுராணம், கந்தபுராணம், சுப்பிரபேதம், இலிங்கபுராணம் முதலிய நூல்களின் ஊடாக அறிந்து கொள்ள முடிகின்றது. இந்து சமயத்தின் முன் தோன்றி மூத்த நாகரிகமாக விள்ங்கும் சிந்துவெளி நாகரிக காலப்பகுதியிலே கண்டெடுக்கப்பட்ட மிருக முகமும் மனித உடலும் கொண்ட கலப்பு வடிவங்கள் கணபதி வழிபாட்டின் தோற்றத்தையே காட்டுகின்றன. மேலும் வேதத்தில் விநாயகர் "ஏகதந்தன்" என அழைக்கப்பட்டமையும் இதிகாஸ இராமாயணத்திலே இராமன் கணபதியை வழிபட்டு இராவணனை வென்றமையும் மகாபாரதத்திலே வியாசர் சொல்ல விநாயகர் மகாபாரதத்தை எழுதிமுடித்தமையும், அதுமட்டுமன்றி விவசாய வளர்ச்சிபெறத்தொடங்கிய காலத்திலிருந்து விநாயக வழிபாடு சிறப்புற வளர்ச்சி பெற்றது எனவும் ஏனெனில் பயிர்களை அழிக்கும் எலி, யானை என்பன விநாயகருடன் தொடர்புடையவை என்பதனால் விவசாயிகள் மிகவும் பயபக்தியுடன் விநாயக வழிபாட்டில் ஈடுபடுவதனையும் காணமுடிகின்றது. அத்துடன் பௌத்தமதம் போன்ற பிறமதங்களிலும் செல்வாக்குப்பெற்றவராக விநாயகர் விளங்குவதைக் காணமுடிகின்றது. உதாரணமாக "சாரணாத்" எனும் தூபியில் புத்தரின் பரிபூரண நிர்வாணத்தின் பொழுது விநாயகர் எலி வாகனத்தில் காட்சி கொடுத்தமை பற்றிய சான்றுகள் பௌத்த நூல்களில் உள்ளமையை நாம் அறியக்கூடியதாக உள்ளது. இவ்வாறு சிறப்புப்பெற்று வளர்ச்சியடைந்த ஒரு வழிபாடாக விநாயக வழிபாட்டினைக் காணக்கூடியதாக உள்ளது.

இவ்வகையில் விநாயகப்பெருமானுக்குப் பல பெயர்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு சிறப்புப் பொருளை உணர்த்தி நிற்பதனைக் காணலாம். "கணபதி என்றால் கணங்களின் தலைவன் எனவும், விக்னேஸ்வரன் என்றால் ஆன்மாக்களின் விக்கினங்களை நீக்குபவர் எனவும், லம்போதரன் என்றால் பானை வயிற்றை உடையவன் எனவும், ஐங்கரன் என்றால் ஐந்து கரங்களை உடையவர் எனவும், விநாயகர் என்றால் தனக்குமேல் தலைவன் இல்லாதவர் எனவும்"...... பல்வேறு வகையில் சிறப்பித்துக்கூறக்கூடிய அம்சங்களைக் கொண்டவராக விளங்குபவர் விநாயகப்பெருமானே. இவரது வழிபாடு பற்றி இருக்குவேதம், தைத்திரீய ஆரணியம், காயத்திரி மந்திரம், கணேஷபுராணம், கணேஷகீதை, கணேஷ தந்திரம்,...... போன்ற பல நூல்களினூடாக அறியமுடியும் எனலாம்.

விநாயக வழிபாடானது ஆகமம் சார்ந்ததாகவும் ஆகமம் சாராததாகவும் நடைபெறும். விநாயகருக்கு 32 மூர்த்தங்கள் அமைத்து வழிபாடு இயற்றுவர். சைவ சமயிகள் விநாயகரை பிரமச்சாரியாகக் கருதி வழிபட வடநாட்டினர் விநாயகருக்கு சித்தி, புத்தி, நீலசரஸ்வதி, வல்லபை எனும் சக்திகளைச் சேர்த்து வழிபடுவதனைக்

**ஆற்றல் உள்ள இடத்தில் அகம்பாவமும் இருக்கும்.**

காணமுடிகிறது. விநாயகரை ஒருபிடி சாணம், மஞ்சள்மா, போன்றவற்றில் அறுகம்புல்லினை குற்றி வைப்பதன்மூலம் இலகுவான முறையில் எழுந்தருளச் செய்யலாம். இவருக்கு மோதகம், அவல், எள்ளுருண்டை, அரிசி, கரும்பு, வில்வம், அறுகு, வாழைப்பழம், தேங்காய் போன்றன மிகவும் விருப்பமுடைய பொருட்களாகும். இவரை வழிபடும்போது கணேஷபஞ்ச தந்திரம், விநாயக கவஷம், விநாயக அகவல், திருவிரட்டைமணிமாலை, திருநாரையூர் இரட்டைமணிமாலை முதலிய தோத்திரங்களைப்பாடி வழிபடலாம். விநாயக விரதங்களாக விநாயகசஷ்டி, விநாயகசதுர்த்தி, சுக்கிரவாரம் போன்றன கடைப்பிடித்தால் வேண்டிய வரத்தினை நிறைவேற்றும் சிறப்புமிக்கவராவார்.

விநாயகரது தத்துவம் பற்றி நோக்கும்போது விநாயகவடிவம் "பிரணவஸ்ரூபியாக" அமைந்துள்ளது. இவர் ஓம்காரமூர்த்தியாகவும், பிரணவப் பொருளாகவும் பிரணவ வடிவினராகவும் விளங்குகிறார். இவரது திருவடிவில் சிவன், சக்தி, நாதம் என்பன உள்ளன. விநாயகரின் துதிக்கை ஓம் எனும் பிரணவப்பொருளைக் குறிக்கின்றது. விநாயகரது முக்கண்களும் சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய முச்சுடர்களையும் குறித்து நிற்கின்றன. பானை வயிறு பரிபூரணமானது என்பதை விளக்கி நிற்கின்றது. சுளகு போன்ற காது நாம் கேள்விஞானம் உடையவராக விளங்கவேண்டும் என்பதனையும் குறித்து நிற்கின்றது.

அதுமட்டுமன்றி ஐந்தொழில் தத்துவத்தை உணர்த்தும் வடிவமாகவும் இவர் விளங்குகின்றார். அதாவது,

பாசம் ஏந்திய கை படைத்தல் தொழிலையும்
தந்தம் ஏந்திய கரம் காத்தல் தொழிலையும்
அங்குசம் ஏந்திய கரம் அழித்தல் தொழிலையும்
துதிக்கை மறைத்தல் தொழிலையும்
மோதகம் அருளல் தொழிலையும் விளக்கி நிற்பது சிறப்பிற்குரிய ஒன்றாகும்.

விநாயகரது வாகனம் மூஷிகம் (பெருச்சாளி) இது ஆன்மாவைக் குறிப்பதாகும். அதாவது ஆன்மாக்கள் என்றும் இறைவனை நோக்கிய வண்ணமே இருத்தல் வேண்டும் எனவும் எலியானது எதையும் துருவித்துருவி ஆராயும் தன்மை கொண்டதுபோல, ஆன்மாக்களும் எந்த விடயமானாலும் அலசி ஆராய்ந்தே பின் முடிபு எடுக்கவேண்டும் என்பதைக் குறிக்கின்றது.

விநாயக வழிபாட்டின் தோற்றம். தத்துவம் என்பவற்றை நோக்கிய நாம் அவற்றின் வளர்ச்சிபற்றி நோக்கும்போது காணபத்திய வழிபாடானது இந்தியா மட்டுமன்றி இலங்கை, பர்மா, கம்போடியா, யாவா, போர்னியோ, பாலித்தீவு, சீனா, யப்பான் போன்ற நாடுகளில் எல்லாம் சிறப்பாகக் கொள்ளப்படும் வழிபாடாகும். இலங்கையில் சிறப்பான முறையில் விநாயக வழிபாடுபற்றி ஆராய்ந்த கலாயோகி ஆனந்தகுமாரசாமி அவர்கள் குறிப்பிடும்போது அசோக சக்கரவர்த்தியின் புத்திரியாகிய சாருமதி என்பவள் விநாயகர்மீது சிறந்த பக்தி செலுத்தினாள் என்றும் மேலை நாடுகளில் இவளே விநாயக வழிபாட்டைப் பரப்பினாள் எனவும் இலங்கையில் மிகுந்தலையில் உள்ள பெரியவிநாயகர் உருவத்தினை இவளே கொண்டு வந்தாள் எனவும் கூறப்படுகிறது.

**மனஅமைதி வேண்டுமானால் பிறரிடம் குற்றம் காணாதே.**

இவ்வகையில் மகத்துவமான உன்னத வளர்ச்சியினைப் பெற்றது இவ்வழிபாடு. இற்றைக்கு 1200 வருடங்களுக்கு முன்பு மாவிட்டபுரக் கந்தசுவாமி கோவிலுடன் தொடர்புடைய "மாருதப்புரவீகவல்லி" என்பவள் விநாயக ஆலயங்கள் பலவற்றை அமைத்ததாகக் கூறப்படுகிறது. கருணாகரத் தொண்டமான் அமைத்த உரும்பிராய்க் கருணாகரப்பிள்ளையார் கோவில், நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார்கோவில், இணுவில், பன்னாலை, கொல்லன்கலட்டி போன்ற ஆலயங்கள் பழைமை வாய்ந்தனவாக விளங்குவதனூடாக இலங்கையின் விநாயகர் வழிபாட்டின் பரவலினையும் சிறப்பினையும் காணக்கூடியதாக உள்ளது.

"தும்பிக்கையான் மீது நம்பிக்கை வைப்போர் நற்கதி அடைவர்" என்பதற்கமைவாக ஔவையார், மெய்கண்டதேவர், அகத்தியர், நம்பியாண்டார்நம்பி, இராமர் போன்றோர் விநாயக வழிபாட்டால் சித்தி பெற்றவர்கள். ஆகவே உலகிற்கெல்லாம் முதல்வனாகவும் மூத்தவனாகவும் விளங்கும் தொப்பையப்பன் விநாயகர் மீது நம்பிக்கை வைத்து நற்பூஜை செய்தால் நிச்சயம் நிரந்தரமான அழிவில்லாத பல சித்திகளைப் பெற்று நற்கதி அடையலாம் எனவும் அவன் தாள் சரணம் என இருந்த பலஅடியார்களுக்கு நற்கதியினை அருளிய எம்பெருமான் பற்றிப் பல இலக்கியங்கள் வாயிலாகவும் அறிந்துள்ளோம். மேன்மையும் உயர்வும் நம்பிக்கையும் உள்ள தும்பிக்கையானை அவனது வழிபாடு பற்றி இக்கட்டுரை மூலம் தெளிவாக அறிந்துகொண்ட நாம் இன்றிலிருந்து அவனே கதிஎன "நித்தலும் கைதொழுதால்" நாட்டில் சாந்தியும் சமாதானமும் உண்டாகிச் சகல சௌபாக்கியத்துடனும் அனைத்து உயிர்களும் இன்னலற்று வாழலாம்.

"யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்"

சுபம்.

## வினை முந்தியா? உடல் முந்தியா?

வினையினால் உடம்பு வருகிறது. உடம்பால் வினையேறுகின்றது. வினையின்றி உடம்பில்லை. உடம்பின்றி வினை இல்லை. வித்தால் மரம் வளருகின்றது. மரத்தால் விதை விளைகின்றது. வித்து முந்தியா? மரம் முந்தியா? கத்தியால் அடித்துக் கொரடு செய்யப்படுகிறது. கொரட்டினால் பிடித்துக்கொண்டு சுத்தியல் செய்யப்படுகிறது. கேவல திசையில் ஆன்மாக்கள் இருட்டறையில் கட்டுண்டு கண்ணில்லாத குழந்தைகள் போலக் கிடந்தன. இறைவன் அவைகளுக்கு சூட்சும உடம்பைக் கொடுத்து அருள்புரிந்தார். அந்த நுண்ணுடம்புடன் கூடிய ஆன்மாக்கள் விருப்பு வெறுப்பு எய்தி மனதால் செய்த நல்வினை தீவினை காரணமாகத் தொடர்ச்சியாக உடம்பும், உடம்பால் வினையும் வந்து கொண்டே இருக்கின்றன.

## எல்லாத்திசையும் ஒன்றுதான்

வழிபாடு செய்கின்ற நாம் வடதிசை நோக்கி வழிபட வேண்டும். வீட்டில் இறைவனுடைய திருவுருவப்படங்கள் நம் சௌகரியத்திற்கு ஏற்ப எல்லாத் திசைகளிலும் வைத்து வழிபடலாம். இறைவனுக்கு எல்லாத் திசையும் ஒன்றுதான்.

**அறவழியில் வராத செல்வம் தேய்ந்துவிடும்.**

உ

# தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்

திரு மு. சிவலிங்கம் அவர்கள்

இப்புவி மீது உயிரினங்களாகப் பிறக்கும் எல்லாவற்றுள்ளும் மனிதப்பிறவி மேலானது. எல்லா உயிரினங்களும் ஒன்று முதல் ஐந்துவரை அறிவை மட்டும் (உயிரினங்களின் வகைக்கேற்பப்) பெற்றுள்ளன. மனிதப்பிறவிக்கு மட்டும் சிந்தித்துச் செயலாற்றும் பகுத்தறிவு என்னும் ஆறாவது அறிவையும் இறைவன் கொடுத்துள்ளான். மனிதன் தன் பகுத்தறிவை நிதானமாகப் பயன்படுத்த வேண்டும். நல்லவற்றையே சிந்திக்கவேண்டும். இதன் மூலம் நல்லனவற்றையே (வாய்மையுடன்) பேசவேண்டும். பிறருக்குத் தீங்கு விளைக்காத நற்செயலைத் தனது தூயசேவையாகக் கருதிப் பணியாற்றவேண்டும்.

இறைவன் மானுடப்பிறவியைப் படைக்கும்போது ஒவ்வொரு உறுப்புக்கும் இணைந்த எலும்புடன் தசையையும் படைக்கின்றான். காலமெல்லாம் வீண்விரயமாக்கிய போதும் இறுதிக்காலத்திலாவது இறைவனைத் துதிப்பதற்காக எலும்பில்லாத நாவையும் படைத்தான். மனிதன் இருபத்தேழு நாட்களும் எட்டு மணித்தியாலங்களும் கொண்ட பத்து நட்சத்திரமாதங்கள் அடங்கிய 273 நாட்கள், எட்டு மணித்தியாலங்கள் தாயின் கருவறையில் தங்குகிறான். கருவுற்றது முதல் பிறக்கும்வரை தாயின் கருவறையில் உடல்வளர்ச்சிக்குரிய சத்தையும், உளவளர்ச்சிக்கான கிரகிக்கும் தன்மையையும் இறைவன் இயற்கையாகவே ஏற்பாடு செய்கிறான்.

பிறந்த சிசுவானது தாயின் ஊட்டத்தினால் வளர்கிறது. பெற்றோரின் அரவணைப்பால் நற்பண்புகளையும் பெறுகிறது. தொடர்ந்து ஒரு நல்லாசிரியர்/ குரு மூலம் கல்வியறிவுடன் சமயநெறி, கலை, கலாச்சாரம், வாழ்வியலுக்கேற்பப் பல்வேறு சிறப்புக்களையும் பெற்றுப் பூரணமான அறிவுடன் செயற்படுகின்றான். மனிதனின் உடல்வளர்ச்சியானது நாற்பது வயதுவரை கூடிக்கொண்டே இருக்கும். நாற்பது வயதின் பின் உடல்வளர்ச்சி தடைப்படுகிறது. வளர்ச்சியடையாத உடலானது வயது முதிர்வடையும்போது எலும்புகள் தேய்வடைகின்றன. கண், காது என்பவற்றின் செயற்றிறன் மங்குகிறது. உடலும் பலவீனம் அடைகிறது. ஞாபகசக்தி குறைகிறது. முற்றாக இயங்கமுடியாமல் உடலானது செயற்பட மறுக்கிறது. படுக்கையில் தஞ்சமடைகிறான். ஆரம்பத்திலிருந்தே பகுத்தறிவு மூலம் தேடிய இறைசிந்தனை, சமயப்பற்றுறுதி, நற்பண்பு யாவும் அகவொளியைப் பிரகாசிக்க வைக்கின்றன.

தான் என்பது எலும்பு, தசை ஆகியவற்றாலான உடல். எமது இறுதிக்காலத்தில் உடல் ஆடாது அசையாது படுக்கையில் வீழ்ந்தாலும் எலும்பில்லாத நா ஆடி அசையும் தன்மையுடையது. அகவொளி கிடைத்தோர் தன் உடல் அசையாதபோதும் அகவொளியின் உதவியால் இறைவனைத் துதிக்க, தசையாலான நாவை உபயோகிப்பர். இறைவனின் ஐந்தெழுத்து மந்திரமான "நமசிவாய" என்பதை நாவினால் உச்சரிப்பது நாவினுக்கு அருங்கலமாகிறது. "தான் ஆடாவிட்டாலும் தசை ஆடும்" என வழக்கில் வந்த சிறந்த

**பிரியமானவேலை எதுவும்கஷ்டமானதே அல்ல.**

அறிவுரை இதுவாகும். மேற்கூறியவற்றை உதாரணமாக நோக்குமிடத்து ஒரு தனி மனிதனின் சிறப்பை அறியலாம்.

எண்ணற்ற திருக்கோயில்களும், சமயநெறியில் வாழ்ந்த பெரியார்களும், கல்விமான்களும், அருளாளர்களும் வாழ்ந்த இணுவிற் கிராமத்தில் விவசாயக் குடும்பத்தில் பிறந்த ஒருவர் இன்றும் வாழ்கிறார். பெற்றோரின் வழிகாட்டலில், சமய வழிபாட்டில் தன்னை இணைத்தார். மாணவப்பருவம் அடிகோலியது. ஆசிரியராய், பகுதிநேர விவசாயியாய், சமய பக்தனாய் வாழ்ந்தார். அறுபது வயதில் கல்விச்சேவையிலிருந்து ஓய்வுபெற்றதும் முழுநேர விவசாயியானார். இப்போது இவர் உடல் உழைப்பால் சிறந்த பலசாலியான உடலமைப்புடையவர். பகுத்தறிவால் சிறந்த பண்பாளனாகவே காட்சிதந்தார். எண்பது வயது வந்தது. கட்புலன், செவிப்புலன், உடற்பலம் யாவும் மங்கின. நடமாட முடியாத நிலையில் வீட்டின் வரவேற்பறையில் அமர்ந்திருப்பார். எப்பொழுதும் தெய்வசிந்தனையில் இறைவனை வேண்டித்துதித்தும், தேவாரப்பதிகங்களை இடையறாது பாடியும், அடிக்கடி தலைமேல் கரம்குவித்தும் காணப்படுவார். நண்பர்கள் இவரை அணுகித் தம்மை அறிமுகஞ் செய்தால் தமது இளமைக்கால நிகழ்வுகளையிட்டுச் சம்பாசிப்பார்கள். இவரை அணுகிய நண்பரொருவர் உரையாடிக்கொண்டிருந்த போது வந்தவரை நோக்கியவர் "கோயிலுக்குப் போகவில்லையோ பூசைக்கு நேரமாகிறது" என்று நினைவுபடுத்தினார். உடனிருந்தவர் திடீரென எழுந்து கோயிலுக்குச் சென்றுவிட்டார் இப்பெரியார் நடமாடிய காலத்தில் அயலிலுள்ள எல்லாக் கோயில்களிலும் தினமும் வழிபடுபவர். குறிப்பாக அயலிலுள்ள பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலில் முக்காலப் பூசைக்குத் தவறாது சென்றும் வந்தவர் அவரது உடல் செயலிழந்தும், அகவொளியால் பூசைநேரங்களை நிதானப்படுத்தியவர். இதனாலேதான் நண்பருக்குப் பூசைநேரத்தை ஞாபகமூட்டினார்.

நண்பர் கோயில் சென்றிருந்தவேளை, பிள்ளையாரின் கோயில் மணியோசை ஒலிக்குமுன்பே பெரியாரின் தலைமேல் குவித்த கரங்களும், நாவில் தோத்திரங்களும், நெஞ்சில், அகக்கண்ணால் பூசை நடைபெற்ற காட்சியும் பதிவாகின. பூசை முடியும்நேரம் வரை வேறெவருடனும் பேசாது இறை தியானத்தில் தன்னை இணைத்தார். பூசை முடிவுறும் நேரம் கடந்தபின்பே அருகிருந்தோரிடம் உரையாடினார்.

இவர் சிந்தனையால் வணங்க, வாயானது பாட, நாவானது ஆடியசைய இவரது குரல் மட்டும் ஓங்கி ஒலிக்கவில்லை. இதுவும் ஒரு தெய்வீக நிகழ்வாகும்.

பகுத்தறிவினால் பண்பட்ட நல்ல உள்ளம் நன்கு பிரகாசத்துடன் பணியாற்றும். இதை நோக்கியே "உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காது இது வல்லவன் வகுத்த வழி" என்ற சொற்றொடர் வழக்கில் உண்டு.

தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும் என்ற நிலையை நாமுணர்ந்து தெய்வ சிந்தனையிலிருந்து இறைவனை இடையறாது சிந்தையிற் பதித்தால் இறுதிக்காலத்தில் ஏற்படும் மரண பயத்திலிருந்து நீங்கலாம். எனவே நாமும் தொடர்ந்து திருவைந்தெழுத்தையேனும் இடையறாது ஓதி நற்பலன் பெறுவோமாக.

**மோசம் செய்யாத நண்பன் புத்தகம் மட்டுமே**

உ

# அப்பர் சுவாமிகளின் பத்து நியமங்கள்

திரு க.ந. பாலசுப்பிரமணியம் அவர்கள்

எல்லாம் வல்ல சிவபெருமான் அன்பெனும் பிடியுள் அகப்படுபவர். ஆனால் பிரமனும் திருமாலும் தங்களுக்குள் எழுந்த (அகம்பாவப்) போட்டியால், தங்கள் ஆற்றல் கொண்டு எம்பெருமானைக் காணமுயன்று தோற்றனர் என்பது புராணவரலாறு. அவர்களது அறியாமையைக்கண்டு இரங்கிய பரம்பொருள், அவர்களுக்கு "நான் இங்கிருக்கிறேன்" என்று இலிங்கத்திலிருந்து வெளிப்பட்டு அருள்பாலித்தருளினார்.

இந்தப் புராண சம்பவத்தைக்கொண்டு, இறைவனைப் பக்திவலையாற் பிடிக்கலாமேயல்லாது, அகங்காரத்தால் அவனையடைய முடியாது என்பதை வலியுறுத்தி, இறைபக்தர்கள் மேற்கொள்ளவேண்டிய செயற்பாடுகளை, மேற்கண்டவாறு பட்டியலிட்டுத் தருகின்றார் உழவாரத்தொண்டர் அப்பர்சுவாமிகள்.

அப்பரடிகள் சொல்லித்தந்த நியமங்கள்

1. திருக்கோயிலுக்கு உள்ளன்புடன் சென்று, சிவபிரான் திருநாமங்களை உச்சரித்தவாறு, மணம் மிகுந்த மலர்களைக் கொய்து அருச்சனை பண்ணுதல்.

2. எம்பெருமானைச் சுத்தமான தண்ணீரினால் திருமுழுக்காட்டிப் பூக்களால் அலங்கரித்து அழகு பார்த்து, வலம்வருதல்.

3. சிவாலயங்களைச் சுத்தம்செய்தல், மெழுகுதல், தண்ணீர் தெளித்தல் முதலியன செய்து, சிவசிந்தனையோடு இருத்தல்.

4. வீண்வார்த்தை பேசாது, பாலும், தேனும் கொண்டு எம்பெருமான் திருமேனியைக் குளிரச்செய்து திருமுழுக்கு ஆட்டுதல்.

5. சிவலிங்கப்பெருமானுக்கு நல்லபட்டாடைகள் சாத்தி அலங்கரித்தல். பின்பு எருக்குமலர்களாலும் வில்வங்களாலும் பிறமலர்களாலும் தலைமாலை அணிவித்தல்.

6. ஒளிப்பிழம்பாகிய எம்பெருமானுக்குத் திருமுழுக்காட்டுவதற்குச் சுத்தமான தண்ணீரை குடம் குடமாகக்கொண்டுவந்து கொடுத்தல். வேண்டியளவு மலர் பறித்துக் கொடுத்தல். மேலும் சிவதொண்டு பல செய்தல்.

7. எம்பெருமானின் திருவருளை வேண்டிச் சிவசின்னங்கள் அணிந்து, அவன்புகழ்பாடும் தேவாரப்பதிகங்கள் பாடுதல் அட்டாங்க வணக்கம் செய்தல்.

8. மன்மதனை எரித்தவராகிய சிவனின் திருவடிகளில் எம்பெருமானுக்கு உகந்த மலர்மாலை கட்டி அணிவித்தல்.

9. சிவசின்னங்களாகிய விபூதி தரித்தல், உருத்திராக்கமாலை அணிதல், தமிழ்வேதமாகிய தேவார திருவாசகம் முதலான பஞ்சபுராணம் ஓதுதல்.

10. சிவசின்னங்கள் அணிந்த சிவனடியார்களை வணங்குதல் - மதிப்பளித்தல், சிவபெருமானின் திருவிளையாடற் கதையினைப் பக்திபூர்வமாக கேட்டுநடத்தல்.

இவையாவும் சிவன் அடியவர்களுக்கு உரிய செயல்களாகும். மேற்கூறிய விடயங்களை அனுசரித்து நடந்தால், சிவதரிசனத்தை எளிதில் அடையலாம்.

**வெற்றி எண்ணத்தைப் பொறுத்தே இருக்கிறது.**

மேற்கூறிய பக்தி நியமங்கள் அடங்கிய, அப்பரடிகள் பாடி அருளிய பதிகம் இலிங்கபுராணக் குறுந்தொகை எனக் கூறப்படுகின்றது.

இதில் ஒவ்வொருபாடலிலும், இருவர் ஒருவர் என்றேகூறி, இறுதிப்பாடலில், அவ்விருவர் செங்கண்மாலும், பிரமனும் என்று காட்டுகின்றது குறிப்பிடத்தக்கது.

ஆகவே மேற்சொன்ன எளிய பக்திநெறிகளை மேற்கொண்டு சிவனை வழிபட்டாலே போதும் சிவதரிசனம் பெறலாம். ஆனால் இவைகள் ஒன்றையும் மேற்கொள்ளாது திருமாலும் பிரமனும் தங்களது அகங்காரத்தினால் சிவபெருமானின் அடியையும், முடியையும் காணமுற்பட்டுத் தோற்றனர் என்பது "கந்தபுராணம்"

அவர்களது ஆற்றாமையைக் கண்டு இரங்கிய கருணாமூர்த்தியாகிய சிவபெருமான் சோதிவடிவாகக் காட்சி கொடுத்து, இருவரதும் அகந்தையை நீக்கி அருள்பாலித்தருளினார்.

அப்பர்பெருமான் இயற்றிய இலிங்கபுராணக் குறுந்தொகைப் பதிகம் கற்றுத்தரும் நியதிகளை உள்ளன்போடு உணர்ந்து சிவனைத் தினமும் மூன்று வேளையும் வணங்கி எமது பிறவித்துன்பத்தை நீத்து எம்பெருமானின் திருவடிஅடையலாம்.

## தீர்வுகொண்டு நல்லூரா தேரிலேறி வருக!

ஆறுமுகத்தோடு அபயகரம் காட்டி
ஆறுதலைத்தரவே தேரிலேறி வருக
கையில் வேலோடு நலிந்தவரைக்காக்க
நாலு திக்கும் தொழவே நல்லூரா தேரிலேறி வருக
வீறு கொண்ட சூரன் வெம்பகையை முடித்த
வேலைத்தாங்கி முருகா தேரிலேறி வருக
தீர்வு தந்தெமது திருநாட்டைக் காக்க
சேதியொன்று கொண்டு தேரிலேறி வருக.

எழிலான நல்லூரா இந்நாட்டு
எல்லோரின் வாழ்விலும் வழிகாட்டு
பொழிலான மயிலேறி பழியோட்டு
புது வாழ்வை மண்ணிலே நிலைநாட்டு
தமிழான கடவுளே அருள்கேட்டு
தாள் களைப் பணிகிறோம் ஒளிகாட்டு
அமிழ்தான தமிழிலே உன் பாட்டு
ஆக்கியே வணங்கிறோம் வழிகாட்டு

*-மதுரகவி காரை. எம்.பி. அருளானந்தன்-*

உ

(தொடர்ச்சி...



# அருணகிரிநாதசுவாமிகள் திருப்புகழும் கிருபானந்தவாரியார் பொருளுரையும்

திரு S.S. ரஜீந்திரன் அவர்கள்

**தீந்தமிழ்**

மனிதன் உருவாக்கியவற்றுள் தலை சிறந்ததில் மொழியே முதலிடத்தை வகிக்கிறது. நாம் தொடர்பாடல் செய்வதற்கு மொழி ஒன்று இல்லாவிடின் சகல மனிதர்களும் ஊமைகளாகவே இருப்பர். அவ்வாறான உலகத்தைக் கற்பனையில் பாருங்கள். எல்லா மனிதர்களும் ஆதிவாசிகள் போலவே இன்றும் இருப்பார்கள். ஆனால் இன்று மனிதர்கள் செய்யும் வேலைகளை மிகவிரைவாகவும், துல்லியமாகவும் செய்யுமளவிற்கும் மற்றைய கோள்களுக்கு விண் ஊர்தியில் செல்லும் அளவிற்கும் விஞ்ஞானம் வளர்ந்திருக்கிறது என்றால் அதற்கு அடிப்படைக்காரணம் மொழிமூலமான தொடர்பாடல் என்பது தெளிந்த உண்மை.

உலகத்திலே நூற்றுக்கு மேற்பட்ட மொழிகள் பேசப்படுகின்றன. அவைகளுள் தலைசிறந்தது தமிழ் மொழியேயாம். மற்றைய மொழிகளெல்லாம் மனிதர்களால் உருவாக்கப்பட்டவை. ஆனால் தீந்தமிழோ இறைவனால் எமக்கு அருளப்பட்டது.

'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திலே
முன் தோன்றிய மூத்தகுடி தமிழ்'

இவ்வாறான பழைமை வாய்ந்த தமிழ்மொழியானது இறைவன் அருளை எளிதிற் பெறுவதற்கேற்ற சிறந்த மொழியாகும். சிவமூர்த்தி சங்கப்புலவர்களில் தானும் ஒருவராகித் தமிழ் ஆராய்ந்துள்ளமையாலும், பெற்றான் சாம்பான் பொருட்டு உமாபதியிடம் சீட்டு எழுதியனுப்பியது தமிழிலேயாதலினாலும், சுந்தரருக்கும், சேக்கிழாருக்கும், அருணகிரிநாதருக்கும் அடியெடுத்துக் கொடுத்தது தமிழிலேயே என்பதனாலும் தீந்தமிழின் பெருமை விளங்குகிறது.

மேலும் சம்பந்தப்பெருமான் பாடிய தமிழ்த் தேவாரங்கள் முயலகன் எனும் நோய் தீர்த்ததும், படிக்காசு பெற்றதும், வெப்புநோய் தீர்த்ததும், எலும்பைப் பெண்ணாக்கியதும் போன்ற பல அற்புதங்களைச் செய்தன.

இவ்வாறே பாம்பு கடித்தவனை உயிர்ப்பித்தமை, சிவனே பிட்சை எடுத்துச் சுந்தரருக்குச் சோறூட்டியமை, சுந்தரருக்காக சிவபெருமான் தூது சென்றமை, இறைவனைக் குதிரைச் சேவகனாக வரச்செய்தமை என்று தமிழ் மொழி செய்த அற்புதங்கள் தொடர்கின்றன.

இப்பெருமைகளை உடைய தமிழ்மொழியைப் பேசுவதற்கு நாம் முற்பிறப்பிற் செய்த நல்வினைப்பயனே காரணம். அத் திருமொழியால் அருணகிரிநாத சுவாமிகள் அருளித்தந்த திருப்புகழ்ப் பாடல்களால் ஆற்றங்கரையானைப்பாடி உய்வோமாக.

முருகப்பெருமானின் நான்காவது படைவீடாகிய திருப்பழநிமலையானது பற்பல அதிசயங்களைக் கொண்டுள்ளது. அங்கே ஆண்டவர்க்கு வள்ளி, தெய்வானை

**நீதி மெதுவாகத்தான் நகரும்.**

அம்மையார்கள் இல்லை. ஆனால் பள்ளியறை உண்டு. கண்ணில்லாதவர்க்குக் கண் தருவதும், பிணியுற்றவர்க்குப் பிணி தீர்ப்பதும் கண்கூடு. இவ்வாறான பெருமைகளையுடைய திருப்பதியிலே எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமான் கருணைவடிவினர்! கருணாகரர்! கருணைக்கடல்! கருணாமேரு! கருணாமேகம்! அவருடைய ஆறு திருமுகங்களிலும் குற்றால நீர்வீழ்ச்சியிலும் பல்லாயிரம் மடங்கு மிகுதியாகக் கருணை பொழிந்து கொண்டிருக்கிறது.

"கருணை பொழி கமல முகம் ஆறும்" -திருப்புகழ்-

"உனது முக கருணைமலர் ஓராறும்" -திருப்புகழ்-

"கருணை மேகமே தூய கருணை வாரியே ஈறில்
கருணை மேருவே தேவர் பெருமாளே" -திருப்புகழ்-

"மறுவறு கடலென மருவு பன்னிருவிழி
வழிந்த அருளே பொழிந்த ஒரு பால்" -திருவகுப்பு-

"முகம்பொழி கருணை போற்றி"
போன்ற திருவாக்குகளை உன்னுக.

இப்பெருமைகளையுடைய கருணாகர மூர்த்தியின் திருவடியே உயிர்கள் பிறவித்துன்பத்தால் உண்டாகிய இளைப்பு நீங்க அடையும் சிறந்த இடமாகும். இதன் பொருட்டே இறந்தவர்களை "இறைவன் திருவடி நீழல் எய்தினர்" என்று கூறும் வழக்கு இன்றும் உள்ளது.

இவ்வாறான பெருமைகளையுடைய பழநிமலை முருகப்பெருமானைக் கீழ்வரும் பாடலிற் பின்வருமாறு வேண்டுகிறார் அருணகிரிநாத சுவாமிகள்.

"சிவகுமாரரே! இரத்தினம், வெட்சிப்பூ, கடப்பமலர் ஆகியவற்றை அணிந்துள்ளவரே! வேலவரே! தீந்தமிழ் அளித்த மயில்வீரரே! திருப்பழநியிலும் திருவேரகத்திலும் விளங்குபவரே! நின் திருவடித் தியானமின்றித் துன்பத்தால் மயங்கி அடியேன் அழியாவண்ணம் இகபர சௌபாக்கியங்களைத் தந்தருள்வீரே!"

குறிப்பு:- இத்திருப்புகழ் அடியார்கள் நாள்தோறும் பாடித்துதிக்க வேண்டிய அருமையான பாடல் என்றும், கந்தன் அருளைப் பெறுவதற்கு இத்திருப்புகழ்ப்பாடல் மிகச்சிறந்ததாகும் என்றும் கிருபானந்தவாரியார் சுவாமிகள் வியக்கின்றார்கள்.

**பாடல்**

சரணகம லாலயத்தை அரைநிமிஷ நேரமட்டில்
தவமுறைதி யானம் வைக்க அறியாத
சடகசட மூடமட்டி பவவினையி லேசனித்த
தமியன்மிடி யால்மயக்க முறுவேனோ

**செய்ய முடிந்தவன் சாதிக்கின்றான்.**

கருணைபுரி யாதிருப்ப தெனகுறையிவ் வேளைசெப்பு
கயிலைமலை நாதர் பெற்ற குமரோனே
கடகபுய மீதிரத்ந மணியணிபொன் மாலைசெச்சை
கமழுமண மார்கடப்ப மணிவோனே

தருணமிதை யாமிகுத்த கனமதுறு நீள்சவுக்ய
சகலசெல்வ யோகமிக்க பெருவாழ்வு
தகைமைசிவ ஞானமுத்தி பரகதியும் நீகொடுத் (து)
உதவிபுரிய வேணும்நெய்த்த வடிவேலா

அருணதள பாதபத்ம மதுநித்மு மேதுதிக்க
அரியதமிழ் தானளித்த மயில்வீரா
அதிசயம நேகமுற்ற பழநிமலை மீதுதித்த
அழகதிரு வேரகத்தின் முருகோனே

## பொருளுரை

**சரண கமல ஆலயத்தை அரை நிமிஷ நேரமட்டில்**
**தவமுறை தியானம் வைக்க அறியாத**

தாமரைக்கு நிகரானதும் ஆன்மாக்கள் ஒடுங்கும் இடமாகிய தேவரீருடைய திருவடியை அரைநிமிடமேனும் தவமுறைப்படி ஐம்புலன்களையும் அடக்கித் தியானிக்கத்தெரியாத.

**சட கசட மூட மட்டி பவ வினையிலே சனித்த**
**தமியன் மிடியால் மயக்கம் உறுவேனோ**

அறிவில்லாதவனும், மாசுடையவனும், மயக்கத்தை உடையவனும், தெளிவில்லாதவனும், பிறப்பு இறப்புக்குரிய தீவினையாற் பிறந்துழல்பவனும், திக்கற்றவனுமாகிய அடியேன் அருட்செல்வம் இன்மையால் மயக்கமடையலாமோ?

**கருணை புரியாது இருப்பது எனகுறை இவ்வேளை செப்பு**
**கயிலைமலை நாதர் பெற்ற குமரோனே**

கருணாகரர் ஆகிய தேவரீர் அல்லற்படும் அடியேன் மீது கருணை புரியாதிருப்பதற்கான காரணம் "அடியேன் செய்த குற்றம் யாது?" இந்தவேளையில் திருவாய் மலர்ந்தருள்வீர்! வெள்ளிமலை மேவும் சிவபெருமான் பெற்றருளிய குமரக்கடவுளே!

**கடக புய மீதில் ரத்நமணி அணி பொன்மாலை செச்சை**
**கமழும் மணம் ஆர் கடப்பம் அணிவோனே**

வஜ்ர கடகங்களை அணிந்துள்ள புயங்களில் இரத்தினங்களைப் பதியவைத்துள்ள அணிகலன்களையும், பொன்மாலைகளையும், வெட்சிப் பூவையும், நறுமணம் வீசுகின்ற அருமையான கடம்பமலர்மாலைகளையும் தரித்துக் கொண்டிருப்பவரே!

**முரண்பாடுகள் இல்லாமல் வாழ்க்கை இல்லை.**

**தருணம் இது ஐயா மிகுத்த கனம் அது உறு நீள் சவுக்ய**
**சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு**

நின் திருவருள் பெறுவதற்கு இது நல்ல தருணம் என்ஐயனே! மிகுந்த பெருமையுடைய, என்றும் இடையறாது பரசுகத்தையும், கல்விச்செல்வம், செவிச்செல்வம், சொற்செல்வம், அருட்செல்வம், ஆகிய எல்லாச் செல்வங்களுடன் கூடிய சிறந்த பெருவாழ்வையும்

**தகைமை சிவஞானம் முத்தி பரகதியும் நீ கொடுத்து**
**உதவி புரிய வேணும் நெய்த்த வடிவேலா**

தகுதியையும், பதி அறிவையும், பிறவாப் பேறாகிய மோட்சத்தையும் தேவரீர் தந்தருளித் துணை செய்து காத்தருள்வீர்! நெய் பூசப்பெற்றதும், கூர்மையுடையதுமாகிய வேற்படையை உடையவரே!

**அருண தள பாத பத்மம் அது நிதமுமே துதிக்க**
**அரிய தமிழ் தான் அளித்த மயில்வீரா**

சிவந்த இதழ்களையுடைய தாமரைக்கு நிகரான தேவரீர் உடைய திருவடிகளை நாள்தோறும் தோத்திரம் செய்ய அருமையான செந்தமிழ்ப் புலமையைக் கொடுத்தருளிய மயில் வாகனத்தையுடைய வீரரே!

**அதிசயம் அநேகம் உற்ற பழநிமலை மீது உதித்த**
**அழக திரு ஏரகத்தின் முருகோனே**

பல அற்புதங்கள் நிறைந்த பழநி எனும் மலையின் மேல் தோன்றிக் காட்சி தரும் பேரழகுடையவரே! திருஏரகம் எனும் பதியில் எழுந்தருளியுள்ள முருகப்பெருமானே!

(தொடரும்...

## தோப்புக்கரணம் ஏன்?


புருவத்தின் நடுவிலிருந்து உள்நோக்கி ஒரு கோடும், உச்சியிலிருந்து கீழ்நோக்கி ஒரு கோடும் சந்திக்கும் இடம் அறிவுக்கு நிறைகலமாகும். மயங்கியிருக்கின்ற ஒருவனைத் தட்டுவதுபோல் ஞான விநாயகரிடம் சென்று மயங்கிய அறிவைத் தெளிவுபடுத்திக் கொள்ளும் பொருட்டுச் சிரசில் குட்டிக் கொள்வது என உணரவேண்டும்.

உடம்பு வளைந்து நிமிர்வதால் சுறுசுறுப்பு உள்ளவனுக்கு அறிவில் தெளிவு ஏற்படும். ஆகவே, பிள்ளையார் திருமுன் குட்டிக்கொண்டு தோப்புக்கரணம் போடுகின்ற வழக்கத்தை முன்னோர்கள் வழிவழியாகக் கையாண்டு வருகிறார்கள்.

பிள்ளையார் முன் பயபக்தி விசுவாசத்துடன் குட்டிக்கொண்டு நன்றாக உட்கார்ந்து எழுந்து மூன்றுமுறை தோப்புக்கரணம் போட வேண்டும். இதனால் அறிவும் ஆக்கையும் நலம் பெறும்.

**அருளின் மிக உயர்ந்த வடிவம் மௌனம்.**

உ



# கோயிலும் நாமும்

**செல்வி அ. கந்தையா அவர்கள்**

சமயங்கள், மக்களாகப் பிறந்தவர்கள் மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழிகாட்டுகின்றன. தம் சமயம்சார் தெய்வங்களுக்கு வழிபாட்டிடங்கள் அமைத்து அவற்றைப் பேணிப், போற்றி வழிபடும் மரபு தொன்றுதொட்டே வந்துள்ளது. இவ் வழிபாட்டிடங்களே 'கோயில்' என்று அழைக்கப்படுகின்றன. கடவுள் எங்கும் வியாபித்திருந்தாலும் கோயில்களே அருள்பெருகும் இடங்களாகக் கொள்ளத்தக்கன.

குறிப்பிட்ட இடத்தை இறைவனின் உறைவிடமாகக் கொண்டு வழிபாடாற்றும்போது மற்றைய இடங்களுக்கில்லாத மாண்பும், புனிதத்தன்மையும் அந்த இடத்துக்கு ஏற்பட்டு விடுகின்றது. அந்த வகையில் கோயில்கள் இறைவனின் உறைவிடங்களாக விளங்குவதால் புனிதமும் பொலிவும் உடையனவாகத் திகழ்கின்றன. ஊரில் பல கட்டடங்கள் இருந்தாலும் கோயில்தான் தூய சிந்தனைகளை வளர்க்கும் மைய நிலையமாக விளங்குகின்றது. அதனாலேதான் கோயில் அமைப்பும்கூட அண்ணாந்து பார்த்து ஆண்டவனிடம் மதிப்பும், மரியாதையும் கொள்ளக்கூடிய வகையில் உயர்ந்த கோபுரங்களைக் கொண்டு காணப்படுகின்றது.

கோயில் என்பதை கோ + இல் என்று பிரித்துப் பார்த்தால் 'கோ' தலைவன் - இறைவன் இருக்கும் வீடு, இடம் எனப் பொருள்கொள்வர். இறைவன் இருந்து மக்களுக்கு அனுக்கிரகம் செய்யும் இடம்தான் கோயில். எமது சமயத்தைப் பொறுத்தவரை கோயில் வாழ்க்கையில் இருந்து பிரிக்கமுடியாத நிறுவனமாக அமைந்துள்ளது. "திருக்கோயில் இல்லாத திருவிலூரும் - அவையெல்லாம் ஊரல்ல அடவிகாடே" என்ற வரித்தொடர்கள் கோயிலின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன. அன்றாட வாழ்க்கையில் கோயிலைத்தொழுது செயல்களை ஆரம்பிப்பதுடன், வருடத்தில் பெரும்பான்மையான நாள்களைக் கோயிலிலேயே செலவிடத்தக்க வகையில் சமூகம் ஆலயத்தோடு தொடர்புற்று விளங்குகின்றது.

ஆன்மீக உணர்வைப் பெறாத மனிதன் முழுமனிதன் ஆகமாட்டான். புறஅழுக்கைப் போக்க நீராடுதல் போல அகஅழுக்கைப் போக்கக் கோயில்வழிபாடு துணை செய்கிறது. எனவே தான் 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்றனர் எம் பெரியோர்.

"உன்னை அலங்கரித்து உன் அழகைப் பாராமல்
என்னை அலங்கரித்து இருந்தேன் பராபரமே"

என்ற தாயுமானவரது வரிகள் சாதாரணமக்கள் அனைவருக்கும் கோயில், அங்கு நடைபெறும் கிரியைகள் அபிஷேகம், அலங்காரம், ஆராதனை அனைத்துமே இறை அனுபவத்தைத் தோற்றுவிக்கத் துணை செய்கின்றன. நாம் செய்யும் எக்காரியத்தையும் சிவார்ப்பணமாகச் செய்ய எம்மைத் தூண்டுகின்றன எனலாம். கோயிலில் ஓங்கி உயர்ந்த மணிக்கோபுரத்திலிருந்து ஒலிக்கும் மணிஓசை கோயிலுக்குச் செல்லாதவர்க்குக் கூட மனதில் இறைவனைக் கண்டு துதிக்கத் துணை செய்கின்றது. வீதி உலா, நகர்வலம் என்பனகூட கோயிலுக்குச் செல்ல முடியாதவர்க்கு அருள் பாலிப்பதற்கான செயல்முறை

**இன்பம் கனவில்இல்லை. வாழ்க்கையிலேதான் இருக்கிறது.**

எனலாம். இதனால் தான் "கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்" என்றனர் நம் ஆன்றோர்.

ஆன்மீக உணர்வைப் பெருக்கும் கோயில்கள் வழிபாட்டுக்கு மட்டுமல்லாது வாழ்க்கை நெறிக்கும் வழிகாட்டவேண்டும். வழிபாட்டிடங்களாக மட்டுமன்றிச் சமுதாயத்தின் பல்வேறு தேவைகளையும் நிறைவு செய்யும் நிறுவனங்களாக மாறவேண்டும். ஆரம்பகாலங்களில் மன்னரது கட்டளைகள் கோயில்களில் முரசறைந்து அறிவிக்கப்பட்டன. கிராமபரிபாலனத்துக்காக மன்னர்கள் வருகை தந்தபோது கோயில்களில் தங்கியிருந்தே நிர்வாகத்தை மேற்கொண்டதோடு, பஞ்சாயத்துக்களும் கோயில் மண்டபத்திலேயே நடைபெற்றன. மக்களின் இலக்கிய, இதிகாச, சமயஅறிவு கோயில்களிலேயே வளர்ந்தது. இதன் காரணமாக அமைதியான சமுதாய வாழ்க்கை அமைந்து காணப்பட்டது. புராணபடன மண்டபமாக, தருக்க மண்டபமாக, இசை அரங்காக, கலைகளின் இருப்பிடமாக சமுதாயத்தின் அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றும் நிறுவனமாக அமைந்தமையால் ஒழுங்கும், கட்டுப்பாடும், ஆன்மீகச் சிந்தனையும் அனைவரிடமும் நிறைந்து காணப்பட்டது.

இந்த நிலையை இன்று நாம் வாழும் காலத்தோடு ஒப்பிட்டு நோக்கின் கோயில்களின் எண்ணிக்கையும் அளவும் உயர்ந்து காணப்படுகின்றது. இவை காலத்தின் தேவைக்கேற்பச் சமுதாயக் கோயில்களாகவும் மாறவேண்டும். இன்று எதிர்காலம் பற்றிய நிச்சயம் இல்லாத ஏக்கமும், துன்பமும் அவலமும் மிக்க காலமாகக் காணப்படுகின்றது. இளஞ் சந்ததியினர் சமூகத்தின் சவாலாக அமைந்து காணப்படுகின்றனர். குழுமோதல்கள், குற்றச்செயல்கள் போன்றவற்றில் ஈடுபடுவோர் தமக்கும் - பாதிக்கப்படுபவருக்கும் ஏற்படும் விளைவுகளைப்பற்றிச் சிந்திப்பதில்லை. வாழ்வியலோடு சமயம் பிணைக்கப்படாமைதான் இவற்றுக்குக் காரணம். 'அறஞ் செயவிரும்பு' எல்லார் மனத்திலும் ஆழமாகப் பதியாமை எனலாம். தலைவனை இழந்து, தந்தையை இழந்து, தாயை இழந்து, சகோதரர்களை இழந்து, தொழிலை - குடிமனையை சொத்தை இழந்து நிர்க்கதியானவர்கள் எத்தனையோ பேர் எம்மத்தியிலுள்ளனர். இவர்களைப்பற்றி - இவர்களது எதிர்காலம் பற்றி அவர்கள் மட்டுமல்ல இச் சமுதாயத்தில் வாழும் ஒவ்வொருவரும் - ஒவ்வொரு நிறுவனமும் சிந்திக்க வேண்டியது அவசியமாகும்.

இவ் வேளையில் கோயில்களின் பங்களிப்பு எத்தகையதாய் இருக்கவேண்டும் என்று சிந்திக்க வேண்டும். ஆரம்பகாலம் போன்று வெறும் வழிபாட்டு நிலையங்களாக மட்டுமல்லாது சமுதாய நிறுவனங்களாகவும் செயற்படவேண்டும். நீதி மன்றத்தில் கோயில்கள் எதிராளிகளாக நிற்கும் பரிதாபம் மாறவேண்டும். கல்விக்கூடங்களாக, கலைக்கோயிலாக, ஆதுலர்சாலைகளாக, அன்னசத்திரங்களாக, மக்கள் மனத்தில் நம்பிக்கையூட்டும் அமைப்புக்களாகச் செயற்படவேண்டும். பெயருக்காகவும் புகழுக்காகவும் பெருந்தொகைப் பணத்தைச் செலவுசெய்வதை விடுத்து உண்மையான பக்திக்காக, மானுடமேம்பாட்டுக்காக கோயில்களின் பணிகள் விரிவடையவேண்டும். வாழ்வியலோடு சமயமும் அறநெறியும் ஒன்றுபடவேண்டும். சமயப்பணியாகிய ஆத்மீகப் பணியுடன் சமுதாயப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வகையில் கோயில்களின் பணிகள் விரிவடையவேண்டியது அவசியமாகும்.

**எந்தச் சந்தர்ப்பத்திலும் மனம் தடுமாறாதே.**

உ

# உலகெலாம் தேடியும் காணேன்

**திரு சிவ சண்முகவடிவேல் அவர்கள்**

**ஆ**தியும் அந்தமும் தானேயான அரும்பொருள் ஞானமே வடிவினன். ஞான சொரூபி அங்கு இங்கு என்னாது எங்கும் காணுமிடம் எல்லாம் நீக்கமற நிறைந்த சுயம் பிரகாசமான ஒளிமயமானது. உள்ளும் புறம்பும் ஊடுருவி நிற்கும் ஒண்பொருள். மணிவாசகனார் அந்த உண்மையை உணர்த்தக் கையாண்ட சொற்பதம் இது; "ஒன்று நீ அல்லை. அன்றி ஒன்றில்லை" என்பதாம்.

பின்னரும் உன்னுவார்; " பூதங்கள் தோறும் நின்றாயெனில் அல்லால் போக்கிலன் வரவிலன் என நினைப்புலவோர் கீதங்கள் பாடுதல் ஆடுதலல்லால் கேட்டறியோம் உனைக் கண்டறிவாரை-" என்று பள்ளி எழுச்சியில் பகர்வார்.

கடவுள் கடவுள் என்று கற்பிப்பார்கள். பாடுவார்கள். கூத்தும் ஆடுவார்கள். ஆனால் கடவுளைக் கண்டேன் என்று அழுத்தம் திருத்தமாக இழுபறி இல்லாமல் சொன்னவரைக் கண்டதும் இல்லை. கேள்விப்பட்டதும் இல்லை.

"கண்டேன் அவர் திருப்பாதம்" என்று உறுதியாக உரை செய்யும் திருநாவுக்கரசு நாயனார் பின்னரும் அரியானான கடவுள் 'மனத்தகத்தான் தலைமேலான் வாக்கினுள்ளான்' என்று உயிர் உடல் எங்கும் செறிந்திருப்பது போலக் கடவுளும் உடம்பு எங்கும் செறிந்திருக்கும் செய்தியைத் திருதாண்டக வாயிலாக வாயாரப் பாடுவார்.

திருவாதவூரடிகளாரும் திருவாசகத்தைப் பாடுவதற்கு எடுத்துக்கொண்ட பொழுதில், நெஞ்சில் இறைவன் நிலைத்திருக்கும் செய்தியை வாழ்த்துவார்.

"இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க"- என்று எடுத்து ஆள்வார்.

திருமூலர் திருமந்திரத்தில் அந்த உண்மையைத் தெளிவுபடுத்துகின்றார்.

ஏகன் உள்ளத்துள்ளான். உள்ளே ஒளிரும் சோதி அவன். ஒருவனான அவன் உள்ளத்தை விட்டு ஓரடிதானும் நீங்கமாட்டான். உள்ளம் தானும் ஒருவனோடு இருந்தாலும் உள்ளம் அப்பெருமானுடைய உருவத்தைத் தெளியமாட்டாது. - (431)

இந்த உண்மைகள் ஒன்று திரண்டு ஒரு பேருண்மையைப் புலப்படுத்துகின்றன.

நாம் கடவுளைக் காணுதற் பொருட்டாகக் காசினி எங்கும் செல்லுகின்றோம். அங்கு அங்கு உள்ள திருக்கோவில்கள் எங்குஞ் சென்று வழிபாடு ஆற்றுகின்றோம். காணாக் கடவுளைக் கண்டோமா? காணுங்கள் என்று ஆராவது காட்டினார்களா?

உலகத்தைச் சுற்றி வலம் வந்தும் உணர ஒண்ணாத ஒப்பற்ற ஒளி உள்ளத்தில் உள்ளுறு சோதியாக உறைகின்றான். அப்பொழுது நான் கடவுளா? நான் கடவுள் அல்லாவிடினும் கடவுள் என் உள்ளத்தில் உறைகின்றான்.

என்னுள்ளத்தில் உறையும் உத்தமன் என்னை வழிப்படுத்துகின்றான். என்னை உண்ணச் செய்கின்றான். உறங்க வைக்கின்றான். நல்லனவற்றை நாடச்செய்கின்றான். அல்லனவற்றை அகற்ற முனைகின்றான். அவன் ஆட்டுகின்றான். நான் ஆடுகின்றேன்

**சேவை செய்பவனிடம் வேற்றுமை கிடையாது.**

என்ற உண்மையை அறிவுறுத்துகின்றான்.

ஓரொருகால் ஆணவ முனைப்பு ஆட்டிப்படைக்கத் தலை எடுக்கும் போது திருவருளின் செயற்பாட்டை முறியடிக்கின்றது.

அவா, ஆசை, மோகம், பொறாண்மை போன்ற நரிக்குட்டிகள் ஆணவமுனைப்பாக எழுந்து தெய்வீக உணர்வுகளை அணுகாமல் அகற்றிவிட்டுத் தாம் தலையால் நடப்பதனால், உள்ளத்தை விட்டு ஓரடி நீங்கா ஒருவனை உன்னாது உலகமெல்லாம் கடவுள் கருணையைத்தேடி அலையும் துர்ப்பாக்கியத்திற்கு ஆளாகும் தன்மையர்கள் ஆகின்றோம்.

## சஞ்சலம் அகற்றும் சந்நிதி முருகன்

சந்நிதி வேலனைச் சார்ந்தவர் மனதினில்
சஞ்சலம் அகன்றிடுமே - அவன்
பன்னிரு தோள்களும் பாதபங் கயங்களும்
பயவினை தீர்த்திடுமே
நாவினில் அவன்பெயர் நலமுடன் நவின்றிட
நல்வினை சேர்ந்திடுமே - அவன்
கோவிலைத் தினம்தினம் கும்பிட்டு வலம்வரின்
கொடுவினை அழிந்திடுமே

நேரினில் வரவிய லாதவர் தமக்கும்
நினைத்திட அருள்வருமே - அவன்
சீரிய குணநலன் கேட்டிடும் போழ்தினில்
செவிகளும் அமிழ்துறுமே
பூவர சில்உறை மாலவன் மருகனை
பணிந்திட நலம்வருமே - உம்பர்
தேவனை தானைத் தலைவனைச் சரண்புக
தேய்ந்திடும் பழவினையே

காவடிக் கந்தனை கஜமுகன் தம்பியை
காணுந் தொறும்நலமே - அவன்
சேவடி தொழுதுஇடும் திருவமு துண்பது
செகத்தினில் இணையிலதே
வம்மின் வம்மின் வந்தருள் பெறுமின்
வாழ்க்கை நலமுறவே - பணி
செய்மின் செய்மின் சிவனுமை பாலனைச்
சேர்ந்திடும் வாய்ப்புறுமே.

*-கந்தவனம் கோணேஸ்வரன்-*

**மனிதனின் குற்றங்கள் நாவிலிருந்தே பிறக்கிறது.**

உ

# இறைவன் இருக்குமிடம்

திரு கு. நவரத்தினராஜா அவர்கள்

நம்முடைய இருதயம் யாருடைய இடம் என்பதை நாம் அறியவேண்டும். அதுதான் இறைவன் இருக்கும் இடம். அந்த இடத்தை நாம் எவ்வாறு வைத்திருக்கின்றோம்? இது நமக்குள்நாமே ஒவ்வொருவரும் கேட்கவேண்டிய கேள்வி? நம்முடைய இருதயமானது பஞ்சமாபாதகங்களுக்கும் உறைவிடமாக உள்ளது நமது இருதயம். சுருக்கமாகக் கூறப்போனால் இதை நாம் ஒரு குப்பைத்தொட்டியாக்கி வைத்திருக்கின்றோம். ஆனால் இறைவன் நம்மிடம் வேண்டுவது என்னவென்றால்

"வெள்ளைநிற மல்லிகையோ
வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு
வாய்ந்த மலரெதுவோ
வெள்ளைநிறப் பூவுமல்ல
வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி
உத்தமனார் வேண்டுவது"

என்று சுவாமி விபுலானந்தர் பாடுகிறார். இறைவன் நம்மிடம் வேண்டுவது நமது உள்ளக் கமலத்தைத்தான். எனவே நம்முடைய இருதயத்தை எப்பொழுதும் மெழுகிச் சுத்தப்படுத்தி அதில் இறைவனை அல்லது இறைவியை உட்கார வைத்து நாமும் உட்காரவேண்டும். இறைவனுடைய பாதாரவிந்தங்களைத் தியானம் செய்யவேண்டும். அதற்கு ஏற்றகாலம் காலை, மாலை, சந்தியாகாலமே இறைவணக்கத்திற்கு ஏற்றகாலம். நிதமும் ஐந்து நிமிடமாவது தியானம் செய்யவேண்டும்.

வாக்கினால் புண்ணியம் செய்யவேண்டும். நிதமும் ஆயிரம் தரம் இறைவன் நாமங்களையாவது சொல்லவேண்டும். அது நமக்கு உபயோகப்படும் அன்றியும் உபத்திரவமும் வராமல் காக்கும். வீணாக வம்பு பேசுவதனால் உள்ள பயமும் அதனால் உபத்திரவமும் இல்லை. மேலே புண்ணியம் உண்டாகிறது இறைவனுக்கு பல நாமங்கள் இருக்கின்றன.

"பேராயிரம் பரவி வானோர் ஏத்தும் பெம்மான்"

என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள் அவனுடைய ஒரு நாமமாவது ஆயிரம் தடவை சொல்லவேண்டும். இறைவனுடைய பெயர் இந்திரியங்களைக் காட்டிலும் மிக்க பலமுள்ளது. எப்போதும் அது உங்களைக் காத்துவரும்.

தெய்வசாநித்தியத்தை உன்னுள் பிரதிஷ்டை செய்யவிரும்பினால் நீ உடல் எனும் கோயிலைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். தெய்வ சக்தியால் உண்மை வெளிப்படும். ஒவ்வொரு தடவையும் நீ அதை மறுத்துப் பொய்ம்மையை மீண்டும் அழைத்தால் இறையருள் எவ்வாறு கிட்டும்? உனது சங்கற்பத்தின் பொய்ம்மையையும்

**நேர்மையாக இருந்தால் சாந்தியும் உள்ளத்தெளிவும் உண்டாகும்.**

உனது சரணத்தின் பூர்வமின்மையும் நீ குறை கூறவேண்டும்.

நீ உண்மையை அழைத்து ஆனால் அதேசமயம் உன்னுள் ஏதோ ஒன்று பொய்யானதை அல்லது அஞ்ஞானத்தை விரும்பினால் பகைச்சக்திகள் உன்னை எப்பொழுதும் தாக்க இடமளிக்கிறாய். அப்போது இறையருளும் உன்னை விட்டுப் பின்வாங்கும். முதலில் உன்னுள் உள்ள பொய்யானதை, இருளானதை ஆகியவற்றை எல்லாம் கண்டுபிடித்து அவற்றைப் பிடிவாதமாக விலக்கி வெளியேற்று அப்போதுதான் நீ ஒளி பெற்று தெய்வசக்தியை உணரமுடியும்.

இறைவனுக்காக நிவேதிக்கப்பட்ட வீட்டில் உண்மையும் பொய்யும், ஒளியும் இருளும், சரணமும் சுயநலமும் சேர்ந்து வாழமுடியாது. தெய்வீக மாற்றம் பூரணமாக இருக்க வேண்டுமானால் அதை எதிர்த்து நிற்பவை அனைத்தும் பூரணமாக விலக்கப்பட வேண்டும். நீ கேட்டவுடன் தெய்வசக்தி எல்லாம் உனக்குக் கிட்டும். நீ விரும்பியது நடக்கும். அவ்வாறு செய்யத் தெய்வம் கடமைப்பட்டிருக்கிறது என்று எண்ணுதே. நீ விரும்பியதையெல்லாம் கடவுள் தரமாட்டார். உன் தகுதிப்படியேதான் அவர் அருள்புரிகிறார். கடவுளின் அருளுக்கு உன்னைப் பாத்திரமாக்கிக்கொள்.

சத்தியந்தான் இறைவன். சத்தியத்தையும் உண்மையையும் கடைப்பிடிப்பவனிடமே கடவுள் அருள் பரிபூரணமாய் இருக்கும்.

(தொடர்ச்சி..

## 2005ஆம் ஆண்டு உற்சவம் (05.08.2005) தொடக்கம் நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| இலங்கநாதன் சிவசங்கர் | கொக்குவில் கிழக்கு | 10,000. 00 |
| சி. கிருபாகரன் சிவசக்தி கோவிலடி | அச்சுவேலி | 2000. 00 |
| குகன் ஸ்ரீ கௌதமன் நாச்சிமார்கோவிலடி | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| திரு திருமதி ஆனந்தராஜா | தெகிவளை | 8000. 00 |
| செல்வி S. ஸ்ரீரங்கநாயகி தாதி உத்தியோகத்தர் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| திருமதி யமுனா வர்ணராஜா (பிரான்ஸ்) | | 10,000. 00 |
| க. இரத்தினம் (இளை. கி. சே) | கரணவாய் தெற்கு | 3000. 00 |
| ஸ்ரீ நதியா நகைமாடம் | ஸ்ரான்லிவீதி யாழ்ப்பாணம் | 2000. 00 |
| T. தியாகலிங்கம் (S.V.M) | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| சி. சிவலோகலிங்கம் நிலாவெளி | திருமலை | 2500. 00 |
| சி. பாலயோகன் | லண்டன் | 50 பவுண் |
| பொ. கணேசபிள்ளை பாடசாலை வீதி | கோண்டாவில் 1மூடை அரிசி | 3000. 00 |
| திருமதி P. பரிமளாதேவிகுடும்பம் | கொழும்பு (கைதடி) | 11,000. 00 |
| வாரியார் தாசன் | கனடா | 25,000. 00 |
| அகிலன் நடராசா | இடைக்காடு (அமெரிக்கா) | 5000. 00 |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| க. இராமச்சந்திரன் | ஊரெழு | 1000. 00 |

நம்பிக்கை இருந்தால் தெய்வத்தைக் காணலாம்.

உ



# நலமளிப்பான் முருகன்

திரு நயினை விஜயன் அவர்கள்

**தொ**ன்றுதொட்டே ஈழவளநாட்டிலே முருகவழிபாடு இருந்து வருவதாகவும் குறிப்பாக யாழ்ப்பாணத்திலே கந்தபுராணக் கலாச்சாரம் மிகக் கூடிய அளவில் மிளிர்வதாகவும் ஆன்றோர் பலரும் கூறுவது ஏற்புடையதே. இதற்குச் சான்றாக எம் மண்ணில் நல்லூர் முருகன், சந்நிதிமுருகன், மாவிட்டபுரக் கந்தன் என்று பற்பல இன்னோரன்ன வடிவினனாக கந்தப்பெருமான் இவ் ஆலயங்களிலிருந்து எமக்கெல்லாம் அருள்பாலித்து வருகிறான்.

வேத ஆகமவிதிகளைக் கடைப்பிடித்து நல்லூரினதும் வேறு பல ஆலயங்களிலும் முருக வழிபாடு இயற்றப்படுமாயினும் மௌனவழிபாடு நடாத்தப்படும் தலங்களாகக் கதிர்காமமும், செல்வச்சந்நிதியும் விளங்குவது முருகவழிபாட்டின் தொன்மையை மேலும் மெருகூட்டுவனவாகும்.

கல்லினாலான படைக்கருவிகளைப் பயன்படுத்திவந்த ஆதிமனிதன் காலம் செல்லச்செல்ல உலோகங்களைக் கண்டறிந்து அவற்றால் வில், அம்பு, வாள் ஆகியனவற்றை உருவாக்கிய காலத்தில் இளமையும் அழகும் பொருந்தியவனாகக் கற்பனை செய்த முருகப் பெருமானுக்கு வீரம் செறிந்ததன் காரணமாகப் படைக்கலமாக வேலைக்கொடுத்தமை மிகப் பொருத்தமானதே.

ஆழ்ந்து அகன்று கூர்மைபெற்று வேல் விளங்குவது முருகனின் நுண்ணறிவுத் தத்துவத்தை மேம்படுத்துவதாகும்.

முருகப்பெருமானின் திருவுருவத்தோடு இடப்புறத்தில் கிரியாசக்தியின் உருவமாக தெய்வயானையையும் வலப்புறத்திலே இச்சாசக்தியின் உருவமாக வள்ளிநாயகியாரையும் இவற்றை இயக்கியவண்ணம் உள்ள ஞானாசக்தியாகிய வேலாயுதத்தையும் கொண்டுள்ளமை முருகதத்துவத்தை மேலும் வலுப்படுத்துவதாகும்.

முருகன் ஆலய உற்சவகாலங்களில் சிறுவர் முதல் வயோதிபர் வரை அரிவையரும் கூடிப் பக்தியுடன் நேரம் தவறாது வழிபாடியற்றுவது கண்கூடு.

இறையருள் வேண்டிக் காவடிகள் எடுத்து வழிபாடு செய்யும் மரபு முருகன் ஆலயங்களில் கூடுதலாகக் காணப்படுவது முருக வழிபாட்டின் தொன்மையை மேலும் மெருகூட்டுவதாகும்.

செதிற்காவடி, தூக்குக்காவடி, பறவைக்காவடி ஆகிய பலவற்றில் ஊனை வருத்துவதன் மூலமாக கந்தனருளைப் பெறமுயற்சி செய்த பழங்குடி அடியார்களின் பாங்கு புலப்படுகிறது.

பண்டுதொட்டு இந்துமதம் போதித்துவரும் விரத வழிபாடுகளில் மிகக் கஷ்டமானதும் பலம் பொருந்தியதுமாகக் கணிக்கப்படுவது கந்தசஷ்டி விரதமாகும்.

ஐப்பசி மாத சுக்கிலபட்சப் பிரதமை முதல் சஷ்டி ஈறாக வரும் ஆறு நாட்களிலும் இது அனுஷ்டிக்கப்படும். இந்த நாட்களில் பூரண உபவாசமிருத்தல் ஏற்புடையதாயினும்

**ஆசையிருப்பவன் கஷ்டப்பட்டே தீரவேண்டும்.**

இயலாதவர்கள் மாலை வேளையில் பால், பழம் உட்கொண்டு இறுதிநாளில் உபவாசமாக இருந்து பாரணை செய்வர்.

கார்த்திகை மாதப்பூரணை தினத்தில் வரும் திருக்கார்த்திகைத் தினம் ஈழதேசத்தில் மட்டுமன்றி இந்தியாவில் கூட மிகப்பிரமாண்டமான அளவில் அனுஷ்டிக்கப்படுகிறது.

அன்றைய தினம் இறைவனைத் தீபத்திலே ஆவாகனம் பண்ணி அந்தத் தீபச் சுவாலையின் அக்கினி பட்ட எல்லா உயிர்களும் சகல பாவங்களும் நீங்கி இறை அநுக்கிரகம் பெறவேண்டி வேதியரும், மகரிஷிகளும் பிரார்த்தனை செய்வர். சகலமக்களும் தத்தமது இல்லங்களிலும் தீபங்கள் ஏற்றிச் சர்வாலய தீப வழிபாடு செய்து வணங்கு வார்கள்.

இந்தத் திருக்கார்த்திகை நட்சத்திரம் ஆண்டுதோறும் தவறாது ஆறுமுகப் பெருமானை எமக்கு நினைவூட்டி அவனது அநுக்கிரகம் கிடைக்க வழி வகுக்கும்.

எமது பழைய வினைகளகற்றி எமது சஞ்சலங்கள் போக்கி எமக்குத் தவறாது அருள்புரியும் கந்தப்பெருமானை வழிபடுவோர் தம்மை மட்டுமன்றித் தம்மைச் சார்ந்த சமூகத்தினர் யாவரும் வளம் பெற்று நலமாக வாழவேண்டி நிற்பது பண்டுதொட்டு நிலவிவரும் மரபு.

"கடுகவே வந்து கனகவேல் காக்க"

எனவே தமிழ்ச்சங்கத் தலைவனும் கலியுகவரதனுமான மயிலேறி வலம்வரும் கந்தப்பெருமானைத் தினமும் தித்திக்கும் தமிழ்ப் பாடல்களாற் போற்றி ஏத்தித் துதித்து வருவோமானால் எமது இடர்களெல்லாம் நீங்கி வளமான வாழ்வு கிடைப்பது திண்ணம்.

"கருணைகூர் முகங்களாறும்
கரங்கள் பன்னிரண்டும் கொண்டு
ஒரு திரு முருகன் வந்தாங் (கு)
உதித்தனன் உலகம் உய்ய"

"சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்"

(நித்திய அன்னப்பணி தொடர்ச்சி...

| | | |
|---|---|---|
| சுசிலா நகைமாடம் | பருத்தித்துறை | 2000. 00 |
| திருமதி யேகேஸ்வரி சிவப்பிரகாசம் இளை வங்கி முகாமையாளர் | கோப்பாய் | 5000. 00 |
| க. பாலசிங்கம் குடும்பம் (டென்மார்க்) | துன்னாலை | 3000. 00 |
| P. பாஸ்கரன் ஆசிரியர் பம்பலப்பிட்டி | கொழும்பு | 4000. 00 |
| N. வரதீசன் | கொழும்பு | 5000. 00 |
| ச. பிரபாகரன் | லண்டன் | 2000. 00 |
| முரளிதரன் செந்தில் கௌரி | குப்பிளான் வடக்கு | 1000. 00 |
| வே. ந. துரைராஜா மக்கள் வங்கி | சங்கானை | 5000. 00 |
| S. சிவலிங்கராஜா (பொருட்கள் வகையில்) | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| மீனாட்சி சுந்தரம் குடும்பம் | லண்டன் | 5000. 00 |

(தொடரும்..

**பணிவு மனிதனின் வாழ்வை உயர்த்தும்.**

# சீவன் முத்தர் தவத்திரு செல்லத்துரை சுவாமிகள்

**திரு விசுவாம்பா விசாலாட்சி அவர்கள்**

## தவத்திரு சிவயோகசுவாமிகளும் சிவதொண்டன் நிலையமும் செல்லத்துரைச் சுவாமிகளின் மோனஞானப்பணிகளும்

எல்லாப் பிறவிகளிலும் சிறந்த பிறவியாகப் போற்றப்படுவது மனிதப் பிறவியாகும். பிறவிகள் ஏழுவகையாகும். ஏழுவகை பிறவிகளையும் எடுத்தபின்புதான் மானிடப்பிறவி கிடைப்பதாக மணிவாசகப் பெருமான் அருளிய திருவாசகத்தின் திறவுகோலாகிய சிவபுராணத்தில் காணப்படுகின்றது.

மனிதப் பிறவியைப் பயனுடையதாக்குவது இறைவழிபாடுகளும் தொண்டுகளுமாகும். இறைதொண்டானது மனிதனைப் புனிதமாக்கித் தெய்வநிலைக்குக் கொண்டு வருகின்ற செய்திகளைப் பெரியபுராணத்திலும் திருவிளையாடற்புராணங்களிலும் மிகுதியாகக் காணப்படுகின்றது. சிவதொண்டின் பெருமைகளைச் சிவயோக சுவாமிகள் நற்சிந்தனையில் அருளியுள்ளார்.

ஆங்கிலேயரின் ஆட்சியினால் அல்லற்பட்ட யாழ்ப்பாணமக்கள் உய்திபெறவும் ஆன்மீகப் பயணம் செய்யவும் யோகர்சுவாமிகள் சிவதொண்டன் நிலையத்தின் வைரமணித்தூணாகத் தவத்திரு செல்லத்துரைச் சுவாமிகளை வலிந்து வலிந்து ஆட்கொண்டார்.

யாழ்ப்பாணம் நாவற்குழி மகாவித்தியாலயத்தில் சுவாமிகள் அதிபராக இருந்த காலத்தில் சிவதொண்டன் என்ற தெவிட்டாத தேன்நிறை தேன்கூட்டில் ஞானம் பூரணமாகப் பொங்கிவழிகின்ற தேனாமிர்தத்தை அருந்தப் பல நாடுகள், கிராமங்கள், ஊர்களிலிருந்து ஞானதாகம் கொண்ட பக்தர்கள் சிவதொண்டன் நிலையத்தை மொய்த்துக் கொண்டனர். ஞான தாகமெடுத்துத் தவிப்போர்க்கு ஞான அருள் மருந்தை சிவதொண்டன் பத்திரிகை மூலம் அகில உலகெங்கும் நதிபோல பரப்ப ஊன்றுகோலாகச் சுவாமிகள் ஊசாற்நிலையிற் காணப்பட்டார்.

தவத்திரு சிவயோக சுவாமிகளின் காலம் ஆங்கிலேயரின் ஆட்சியின் உச்சக்கட்டமான காலம். அக்காலத்தின் நிகழ்வுகளை நினைத்தாலே இரத்தம் கண்ணீராகி நதிபோல் பெருகும். சுதந்திரமாகப் புராணபடனம் செய்யமுடியாது பக்தியுடன் திருமுறைகளைப் பண்ணுடன் பாடமுடியாது இறையருட் கதைகளை வெளியில் மூச்சுவிடமுடியாது. இறைநாமத்தைப்பாடி, திருவைந்தெழுத்தை ஓதி திருநீறு அணியமுடியாத அக்காலத்தில் சிவயோக சுவாமிகள் சைவத்தமிழரின் தோன்றாத் துணையாக இருந்து சிவதொண்டன் நிலையம் நிறுவி சைவசமய உண்மைகளையும் திருமுறைகள் முதலானவற்றின் பெருமைகளையும் நற்சிந்தனையாக சிவதொண்டன் பத்திரிகையில் வெளியாகத் தவத்திரு செல்லத்துரை சுவாமிகள் துணைக்காரணமாக விளங்கினார்.

தவத்திரு செல்லத்துரைச் சுவாமிகள் எப்போதும் மௌனமாகவே காணப்படுவார்.

**தியானம் செய்வதால் மனம் உறுதியடைகிறது.**

அகத்தும் புறத்தும் தமது குருவாகிய சிவயோக சுவாமிகளைப் பூரணமான சரணாகதி கொண்டவராய் இமைப்பொழுதேனும் குருவையும் குருமொழிகளையும் மறவாதவராகினார்.

தவத்திரு சிவயோக சுவாமிகளின் திருவருட் பிரவாகம் பெருகி மட்டக்களப்புச் செங்கலடியில் சிவதொண்டன், கிளிநொச்சி நகரில் திருவடிநிலையம் என்ற நிலையங்கள் தோன்றின. மட்டக்களப்புச் செங்கலடி சிவதொண்டன் நிலையத்தில் பலகாலம் தவத்திரு சுவாமிகள் முதல்வராக இருந்தார். பல பக்தர்களை உருவாக்கினார். மாபெரும் வயலைவாங்கி உழுது நெல்விளைவித்து அதன் பயன்பாடுகளின் ஒருபகுதி இன்றுவரை யாழ்ப்பாணச் சிவதொண்டன் நிலையத்திற்கும் உதவி வருகின்றது.

மட்டக்களப்புச் சிவதொண்டனில் செல்லத்துரைச் சுவாமிகள் மேற்கொண்ட சைவசமயசமூகப்பணிகள் அளவுகடந்தவை. இளைஞர்கட்கு புராணபடன வகுப்பு திருமுறைவகுப்பு, சிறிய சிறார்கட்குச் சமய கலாசார வகுப்புக்களும் நிகழ்த்தினார். பல நூல்களை எழுதியுள்ளார். கோழி ஒரு முட்டை இட்டுவிட்டால் தான் முட்டை இட்ட செய்தியை வீட்டார் மட்டுமன்றி எல்லோரும் அறியும்படி பெரிதாகச் சிலமணிநேரம் கொக்கரிப்பதை நாம் காண்கின்றோம் அல்லவா? ஆமை ஆயிரம் முட்டை இட்டாலும் அசையாது அமைதியாய் இருப்பதைக் காண்கின்றோம். அதைவிட ஆமையிடம் ஓர்சிறப்பு காணப்படுகின்றது தனக்கு ஆபத்து வரும்போதும், ஆரவாரங்கள் கேட்கப்படும்போதும் ஆமையானது தனது உறுப்புகளை(புலன்கள்) உள்ளே அடக்கிவிடுகின்றது.

செல்லத்துரைச் சுவாமிகள், வேதாந்த வழிநூல்கள் முதலாகப் பலபல பயனுள்ள நூல்கள் அருகி அற்றுப்போவதைக்கண்டு மனம்நொந்து, கடதாசி அச்சுவிலையான இக்காலத்தில் “யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்” என்றாங்கு அந்நூல்களை பக்தர்களின் பொருளுதவியுடன் எழுதி வெளியிட்டார்கள். சுவாமிகளின் ஞானமுயற்சி, பக்தர்கட்குப் பலவிதமான ஆன்மீகம் நிறைந்த ஞான பலன்களை அளித்து இம்மைக்கும் மறுமைக்கும் பேரின்பம் அனுபவிக்க வைத்துவிடுகின்றது. சுவாமிகளால் பதிப்பிக்கப்பட்ட பல நூற்றுக்கணக்கான நூல்கள் யாரும் அறியாது பரபரப்போ ஆரவாரங்களோ விமர்சனமோ இன்றி வெளிவந்தன. அவையாவும் இன்றுவரை எவ்வித சலசலப்பில்லாமல் வெளிநாடெங்கும் வதியும் தமிழருக்கும் பிறமொழிபேசுவோர்க்கும் பக்தி நீரைப்பாய்ச்சி ஆன்மீகப் பயிரை வளர்த்து பேரின்பம் என்னும் பயனை அளித்து வருகின்றது.

ஞானம் முதிராத ஒருசிலர் பிரயோசனம் குறைவான நூல்வெளியீடு முதல் வேறுபல காரியங்கட்கெல்லாம் தம்மை விளம்பரப்படுத்தவும், தமது முயற்சிகளைப் பகிரங்கப்படுத்தவும் விமர்சனம் செய்வதைக் காண்கின்றோம். (தொடரும்...

## இறைவனை முப்போதும் நினை

காலையில் எழுந்தவுடன் இறைவனை ஒரு கணமாவது நினை. “இறைவனே! இன்று நான் நல்வழியில் நிற்க அருள் செய் என்று தொழு” உணவு உட்கொள்ளும்போது நினை “இறைவனே! இந்த உணவினால் எனக்கு நல்ல அறிவும், அன்பும் உண்டாக அருள்புரி என்று தொழு” படுக்கும்போது நினை “இறைவனே! இந்த உறக்கத்திலே உன்னுடைய எண்ணமே நிற்க அருள்புரி என்று தொழு”.

**போட்டி மனப்பான்மை இல்லாமல் பணியாற்று.**

உ

# முன்னோர் சொன்ன கதைகள்

## திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள்

'இறைவன் எங்கும் நிறைந்தவன். தூணிலுமிருக்கின்றான். துரும்பிலுமிருக்கின்றான். உள்ளன்போடு வழிபட்டாலே போதும், பக்தனுக்கு அருள்புரிவான்' என்றெல்லாம் கூறுகின்றோம்.

எனினும் தூணிலும் துரும்பிலும் அவனைக் கண்டு வழிபடும் பக்குவம் எமக்கு இல்லாததனால், நம் மனத்தை அவனில் வயப்படுத்தி வழிபடுவதற்காக, கோவிலமைத்தும், பூசையறையென வீட்டில் ஓரிடத்தை வைத்தும் அங்கே இறைவனுக்கு உருவம் கொடுத்து, பெயர்சூட்டி எத்தனையோ வகைகளில் வழிபாடு செய்கின்றோம்.

காலப்போக்கில் நோக்கத்தைக் கைநழுவவிட்டு வேறெங்கோ செல்வது மனிதவியல்பு. இறைவனை வழிபடும் விடயத்திலும் நாம் அப்படித்தானாகிவிட்டோம்.

இன்று 'கோவிலில் திருவிழா நடைபெறுகிறது. போய் வழிபடவேண்டும்' என்று புறப்படும்போது அதைவிட வேறுவிடயங்கள் எமது மனத்தில் முதன்மை பெற்றுவிடுகின்றன. உதாரணத்திற்கு - கோவிலைச் சுற்றிவர உள்ள கடைகளில் வாங்கவேண்டியவற்றைப் பட்டியலிட்டுக்கொள்வதைக் கூறலாம். இறைவனுடன் மனத்தை வயப்படுத்தித் தியானிப்பதற்காக விரதமிருக்க ஆரம்பிக்கும் நாம், விரதம் முடிவடையும்போது எப்படிப்பட்ட உணவுப்பதார்த்தங்களை உண்ணவேண்டும் என்பதைப்பற்றி நினைத்து, பூசை அறைக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தைச் சமையலறைக்கும் கொடுத்து, ஈடுபாட்டை அதில் திருப்பிவிடுகிறோம்.

'இவ்வாறெல்லாம் இருக்கக்கூடாது. இறைவனை எண்ணி, அவனை வழிபடுவதே எமது நோக்கமாக இருக்கவேண்டும்' என்பதை எமது மனத்திலே பதியவைக்க எமது முன்னோர் பல கதைகளைக் கூறியுள்ளனர். அவற்றுள் ஒன்றை இம்முறை தருகிறேன்.

வியாசபகவானும் அவரது சீடர்களும், புண்ணியதலமான காசியைப் பார்க்கவெனப் புறப்பட்டனர்.

"காசியில் 'இல்லை' என்று கூறுபவர் எவருமே இல்லையாம்" என்றார் மகரிஷிவியாசர்.

முனிவருக்கும் சீடர்களுக்கும் மண், பொன், வீடு, ஆடைஅணிகலன்கள் போன்றவை தேவையில்லையல்லவா? அவர்களுக்கு வேண்டியது உணவு ஒன்றுதான். 'உணவு வேண்டிச் செல்லும் வீடுகளில் நல்ல உணவுவகைகள் கிடைக்கும். இந்த ஊரில் உண்ணக்கிடைப்பதை விடச்சிறந்த உணவைக் காசியில் உண்ணலாம்' என எண்ணிக்கொண்டு அவர்கள் புறப்பட்டனர்.

காசிக்கு வந்ததும் கங்கையில் நீராடியபின், வழமைபோல் பிட்சை எடுக்க அவர்கள் சென்றார்கள். இரவு நெருங்கிக்கொண்டிருந்தது. ஒருவருக்கும் ஒருவாய் உணவுகூடக் கிடைக்கவில்லை.

"கேள்விப்பட்டதற்கு நேர்மாறாயிருக்கிறதே" என்று ஆச்சரியப்பட்டனர்.

"ஒருவர்கூட உணவளிக்கவில்லையே" என்று கவலைப்பட்டனர்.

"எதற்கும் நாளைக்குப் பார்ப்போம்" என்றார் வியாசபகவான்.

மறுநாளும் அதேகதைதான். தொடர்ந்து ஒருவாரமாக ஆகாரமின்றி அலைந்து திரிந்தார்கள். உணவின்றி உடல் சோர்வடையப் பெற்றனர்.

எட்டாம் நாள் சீடர்களால் எழுந்து பிட்சை கேட்டுச் செல்லக்கூட இயலவில்லை. வியாசபகவான் மட்டும் புறப்பட்டார்.

சில இடங்களுக்குச் சென்று பயனற்றுப் போகவே சத்திரமொன்றின் முன்னே நின்று, பிட்சை கேட்டுக்குரல் கொடுத்தார். பலமுறை அழைத்தும் பயனில்லை. அவரது பொறுமை போய்விடவே கோபம் கனன்றது. சாபமிடுவதற்காகக் கையை உயர்த்தினார்.

அப்போது உள்ளேயிருந்து வந்த ஒருபெண் "நிறுத்துங்கள்" என்று அழுத்தமாகக் கூறினாள்.

அவள் கூறிய கணத்தில் வியாசரின் கை தூக்கிய நிலையிலேயே நின்றுவிட்டது. அவரால் கையை அசைக்க முடியவில்லை.

"ஏன் சாபமிட முற்பட்டீர்கள்," என்று அந்தப் பெண் கேட்டாள்.

"அம்மா, நானும் எனது சீடர்களும் ஒருவாரமாகப் பட்டினியாக இருக்கிறோம். இந்த ஊரிலுள்ள எல்லா வீடுகளுக்கும் சென்றோம். பிட்சை கிடைக்கவில்லை. இன்றும் அதே கதைதான். இரக்கமற்றவர்கள் மீது கோபங்கொண்டேன்" என வியாசபகவான் கூறினார்.

"போய் உங்கள் சீடர்களையும் அழைத்து வாருங்கள் நான் உணவு தருகிறேன். எவருக்கும் சாபமிடாதீர்கள்" என அவள் அன்புடன் கூறினாள்.

சாபமிடும் எண்ணம் அவரிடமிருந்து நீங்கியதும் கை இயங்கியது. அவர் சென்று சீடர்களை அழைத்து வந்தார். அப்பெண் அனைவரையும் அன்புடன் வரவேற்று இருக்கவைத்து இலைகளை அவர்களின் முன்னே இட்டாள். அவர்கள் பசியோடும் அவள் உணவுபரிமாறுவாளென்ற ஆவலோடும் எதிர்பார்த்திருந்தனர்.

அவள் எதையும் பரிமாறாது "பசியோடு இருக்கிறீர்களே, உணவருந்துங்கள்" என்றாள்.

"நீங்கள் பரிமாறவில்லையே அம்மா" என வியாசபகவான் திகைப்புடன் பதிலளித்தார்.

"இலைகளைப் பார்த்துவிட்டுக் கூறுங்கள்" என அவள் கூறவும் அவர்கள் இலைகளைப் பார்த்தால் ஒவ்வொருவருக்கும் விருப்பமான உணவு வகைகள் அவரவர் இலைகளிலே இருந்தன. அவர்கள் மகிழ்ச்சியுடன் பசியாறினர்.

வியாசர் தன் முன்னே நிற்பவள் அம்பிகை அன்னபூரணி என்பதை உணர்ந்தார். "அம்மா நீயா?" என ஆச்சரியத்துடன் கேட்டார்.

"ஆமாம், தாங்கள் பாடிய மகாபாரதத்திலே திரௌபதியின் அட்சய பாத்திரமாக வந்த அன்னபூரணிதான் நான். காசியில் நான் வீற்றிருப்பது உமக்குத் தெரியாதா?" என்று பெண்ணுருவில் வந்த அம்பிகை கேட்டாள்.

**ஆசைகள் வளர வளர தேவைகளும் வளரத் தொடங்கும்.**

"தெரியும் தாயே, இது என்ன திருவிளையாடல்?" வியாசபகவான் அன்னையினுடைய லீலையின் காரணம் புரியாது அவளிடமே கேட்டார்.

"நான் இங்கு கோவில் கொண்டிருப்பது உமக்குத் தெரியும். காசிக்கு வரும்போது 'அப்பனையும் அம்மையையும் தரிசிக்கவேண்டும். கங்கையில் நீராடிவிட்டுப் பக்தியுடன் வழிபடவேண்டும். புனிதத்தலத்தைத் தரிசிக்கப் போகிறோம்' என்ற எண்ணத்தோடு வந்திருந்தால் உங்களுக்கு அற்புதமான அனுபவங்கள் கிடைத்திருக்கும். பசியைப் பற்றியும் உருசியைப்பற்றியும் நினைத்துக்கொண்டு வந்தீர்கள். அதற்கேற்ற அனுபவத்தைப் பெற்றீர்கள்" என்றாள் அம்பிகை.

வியாசபகவானும் சீடர்களும் தம் தவறை உணர்ந்து அவளது பாதங்களில் வீழ்ந்து மன்னிப்புக் கோரினர்.

முனிவரும் சீடர்களும் இறைவனைத் தொழுவதே நோக்காகப் போகாததால் இப்பாடுபடநேர்ந்ததென்றால் நாம் வேறுநோக்கிற் சென்றால் என்னாகும்?

## பகவானும் நாமும் ஒன்றாவதற்குவழி பக்திமார்க்கம்

பகவத்கீதை பன்னிரண்டாவது அத்தியாயம் பக்தி யோகம் என்று அழைக்கப்படும். ஆனால் உண்மையில் இந்த அத்தியாயத்தில் பக்தியோகம், ஞானயோகம் இரண்டும் விளக்கப்படுகின்றன. முடிவானதத்துவங்கள் அடங்கியிருப்பது ஞானயோகம். அது தன்னளவில் உயர்ந்தது. மெய்ப்பொருளை விசாரித்து அறிந்து கொள்வதற்கு அது பயன்படுகிறது. பக்திநெறி இயல்பாக அமைந்திருக்கிறது. அதன்கண் இனிமையும் அமைதியும் திகழ்கின்றன. ஞானயோகி ஒருவன் தன்னுடைய அறிவுத்திறன் காரணமாக உயர்ந்த நிலைக்குப் போகமுடியும். ஆனால் உயர்நிலையில் இருந்து அவன் வழுவுவானானால், அவனுடைய வீழ்ச்சி மிகமிகப் பெரியது. பக்தன் ஒருவன் தன்னைப் பணிவுடையவனாக்கிக் கொள்கிறான். அடியவர்கள் எல்லோருக்கும் தன்னை அடியவனாக்கி நிற்கும் பக்தனுக்கு நெறிவழுவுதல் என்னும் ஆபத்து இல்லை. ஒருவன் பக்தியில் முற்றிலும் பரிபக்குவம் அடைந்து விடுவானாகில் எல்லாம் "சிவமயம்" என்றநிலை ஏற்படுகிறது. தனக்குச் சொந்தமாக இவ்வுலகில் ஏதேனும் இருப்பதாக அவன் உணர்வதில்லை பகவானுடைய திருவடியைத் தனக்குச் சொந்தமாக்கிவிடுகிறான். அப்போது அண்டத்திலுள்ள யாவும் அவனுடைய அன்புக்குப் பாத்திரமாகி விடுகிறது.

பக்தியே கடவுள் தரிசனத்திற்கு வழி. பக்தி வளர்ந்து முற்றி உள்ளத்திற்குத் தெளிவையும் உறுதியையும் கொடுத்தபின் உண்டாகும் பூரண உணர்வே ஞானம். ஆராய்ச்சியும் அறிவும் ஞானம் அல்ல. "இந்த ஆத்மா படிப்பினாலும் மேதையின் பலத்தினாலும் அடையமுடியாது" என்று உபநிடதம் பேசும்; இதனை மணிவாசகர் இன்னொரு பாணியிலே பேசுவார்.

"முத்திநெறி அறியாதமூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறிஅறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறிவித்துச் சிவமாக்கி எனைஆண்ட
அத்தனெனக்கருளியவா றார்பெறுவார் அச்சோவே"

இது அவர் தில்லையில் அருளிய அச்சோப்பதிக முதற்பாடல். சுருக்கமாகச் சொன்னால், ஈசனும் நாமும் ஒன்றாவதற்கு வழி ஆராய்ச்சி அல்ல, பக்தி மார்க்கமே.

*-சரவணையூர் மலர்-*

**பிறரிடம் குற்றம் காண்பதால் உன் மனம் மாசடையும்.**

உ

# மானுடவாழ்வின் மகத்துவம் காப்போம்

(முருகனடியான்)

இப்பூவுலகில் மனிதப்பிறவி எடுத்த நாங்கள் முதலில் மனிதனாக வாழப்பழகுதல் வேண்டும். மனிதப்பண்புடன் வாழ்தல்வேண்டும். மனிதநேயத்துடன் வாழ்தல் வேண்டும். அப்போதுதான் மற்றவர்கள் நம்மை மனிதனாக மதிப்பார்கள். ஐந்தறிவு படைத்த மிருகங்கள்கூட நல்ல பண்புகளைக் கொண்டிருப்பதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். ஆனால், ஆறறிவுபடைத்த மனிதன் மாத்திரம் நம் கண் முன்னாலேயே தீய பழக்கங்களைக் கொண்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இது ஓர் கசப்பான உண்மை.

மனிதன் முதலில் பறவைகளிடமிருந்தும் மிருகங்களிடமிருந்தும் கற்றுக்கொள்ள வேண்டியன எவ்வளவோ இருக்கின்றன. உதாரணமாக, காகத்தை எடுத்துக்கொள்வோம். அது தனக்கு உண்ண உணவு கிடைத்தால் தான் மட்டும் தனியே உண்ணமாட்டாது. உடனே "கா, கா" என்று கரைந்து தன் இனத்தைக் கூவி அழைக்கும். வேறு காகங்களும் வந்த பின்னர் தான் எல்லாமாகச் சேர்ந்து உணவு உண்ணும். இது ஒரு சிறந்த பண்பு.

எறும்புகளை எடுத்துக்கொண்டால், உணவு கிடைக்கும்போது முழுவதையும் தின்றுதீர்க்காமல் நாளைக்குத் தேவை என்ற உணர்வோடு சேர்த்து வைக்கும் பண்பைக் காண்கின்றோம். இன்று நிறையக் கிடைக்கும்போது அதிலே ஒரு சிறுபாகத்தை நாளைக் குத் தேவைப்படும் என்று ஒதுக்கிவைப்பதனால் நன்மையே விளையும். ஆதலால் நாளைய தேவைக்கு இன்றே முன்னேற்பாடு செய்துகொள்வது நல்லதே.

இதுபோலவே நாங்கள் தெய்வானுக்கிரகம் கிட்டும்போது அது மற்றவர்களுக்கும் கிடைக்கட்டுமே என்று ஆண்டவனின் அருளைப் பகிர்ந்து கொள்ளுதல் வேண்டும். நல்லனவற்றைச் செய்து இம்மைக்கும் மறுமைக்கும் அம்மைக்கும் அருள் உதவக்கூடியது. இந்த உலகில் உண்ண உணவும், உடுக்க உடையும் இருக்க இடமும் தேவையாகும். இவற்றைப் பெறுவதற்கு இறைவனின் திருவருள் வேண்டும்.

நாம் இப்படித்தான் வாழவேண்டும் என்று நமக்கு வாழ்ந்து காட்டியவர்கள் சைவநாயன்மார்கள். அவர்கள் நமது வழிகாட்டிகளாவர். எனவே அவர்கள் வாழ்ந்து காட்டிய நெறியிலேயே நாமும் வாழ்தல்வேண்டும். நாயன்மார்களுள் இறைவனைத் தோழனாகக் கொண்ட சுந்தரமூர்த்தி சுவாமிகள்,

"தம்மையே புகழ்ந்திச்சை பேசினும் சார்வினும் தொண்டர்த்தருகிலாப்
பொய்ம்மையாளரைப் பாடாதே யெந்தை புகலூர் பாடுமின் புலவீர்கள்
இம்மையே தரும் சோறுங் கூறையும் ஏத்தலாமிடர் கெடலுமாம்
அம்மையே சிவலோகமாள்வதற்கு யாதும் ஐயுறவில்லையே"

என்ற திருப்பதிகத்திலே நல்ல தெளிவாகவும் மிக அழகாகவும் வெகுஉறுதி யாகவும் கூறுகின்றார். நல்வினை, தீவினை என்று இருக்கின்றனவல்லவா! நாம் நல்லவற்றைச் செய்தால் நன்மையை அடையலாம். வங்கியிலே பணத்தைப் போட்டுவைப் பது தேவைப்படும் போது எடுப்பதற்காகவே! ஆகவே, நல்வினை என்ற வங்கியிலே

**அறத்தை அடிப்படையாகக் கொண்ட எதுவும் சிதைவுபடாது.**

புண்ணியம் என்ற பணத்தைப் போட்டிருந்தால் தான் பின்னர் அனுபவிக்கமுடியும். செய்தீவினையிருக்கத் தெய்வத்தை நோகக்கூடாது.

ஆகவே, அரியபிறவியாகிய மானுடப்பிறவி எடுத்த நாங்கள் முதலில் மனிதனுக்குரிய உயர்பண்புகளுடன் வாழ்ந்து நல்வினைகளைச் செய்து இப்பிறவியிலேயே அடுத்த பிறப்புக்கான நன்மையைத் தேடிக்கொள்ளவேண்டும். அதை விடுத்து வீணான, கீழ்த்தரமான வேலைகளில் ஈடுபடக்கூடாது. பயறு விதைத்தால் பயறுதான் முளைக்கும். நன்மையைச் செய்தால் நன்மையே கிடைக்கும்.

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை ஏத்தித் துதிப்பதே நமது தலையாய கடனாகும். இற்றை நாள்வரை நடந்தவற்றை மறந்து இனியாவது நல்லதையே செய்து, நல்லதையே எண்ணி, நல்லதையே பார்த்து, நல்லதையே கேட்டு நல்லவர்களாக வாழத்தலைப்படவேண்டும். அப்போதுதான் சமூகத்தில் நன்மைபெருகி, வளமான வாழ்வு கிடைக்கும். இறைவனின் அருட்பார்வையும் கிட்டும்.

மகாத்மாகாந்தியுடைய மேசைமீது மூன்று குரங்குப்பொம்மைகள் இருக்குமாம். அது ஒரு பெரிய தத்துவத்தைப் பறைசாற்றிக் கொண்டிருக்கும். அது யாதெனில், ஒரு குரங்கு கண்களை மூடிய படியும் ஒரு குரங்கு வாயைப் பொத்தியபடியும் ஒரு குரங்கு காதுகளை மூடியபடியும் காட்சியளிக்கும். இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ளவேண்டியது என்னவென்றால் தீயனவற்றைப் பார்க்காதே. தீயனவற்றைப் பேசாதே, தீயனவற்றைக் கேட்காதே என்பதேயாகும். அது எவ்வளவு பெரிய அரிய தத்துவக்கருத்துப் பாருங்கள். நாம் பூவுலகில் நல்லவற்றையே செய்யவேண்டும் என்பதைச் சொல்லாமலே சொல்லிக் கொண்டிருக்கும் ஓர் அரிய அழகுப் பொம்மை அது. அதில் இன்னுமொரு விடயம் என்னவென்றால், அதை ஏன் குரங்குப் பொம்மையாக வைக்கவேண்டும்? வேறு ஏதாவது மிருகத்தையோ பறவையையோ பாவித்திருக்கலாம் தானே! அதிலும் ஓர் உண்மை அடங்கித்தானிருக்கிறது. குரங்கு மனம் என்று சொல்வார்கள். அது எப்போதும் தாவித்தாவி ஓடியபடியே இருக்கும். மனிதன் குரங்கிலிருந்து பிறந்தவன் என்றும் ஓர் ஐதீகம் உண்டு. அதனால்தான் குரங்குப்பொம்மைமூலம் இந்தத் தத்துவத்தை வெளிப்படுத்துகின்றார் மகாத்மாகாந்திஜி அடிகள்.

இதனை நாம் சிறிது சிந்திக்கவேண்டும். சிந்திக்கச் சிந்திக்கத் தெளிவு பிறக்கும். தெளிவு பிறந்தால் அமைதி கிடைக்கும். மனிதசமூகம் சிறந்ததாக மிளிர, நல்லனவற்றைச் செய்து, நன்மை பெருகச் செய்தல்வேண்டும்.

"நன்மைபெருக அருள்நெறியே வந்தணைந்து நல்லூரில்
மன்னு திருத் தொண்டனார் வணங்கி மகிழ்ந்தெழும் பொழுது
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்றவர் தம்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான்"

என்பது சேக்கிழார் திருவாக்கு.

ஆகவே, நன்மைகள் பெருக நாம் நல்லனசெய்தல் வேண்டும். மனிதமாண்பின் மகத்துவமே இதுதான். நல்ல மனிதர்களாக வாழ்ந்து, உலக ஷேமத்துக்காக உழைத்து, சமூக நன்மைகருதி வாழ்வாங்கு வாழ 'அவனருளாலே அவன்தாள் வணங்கி' என்றபடி அவனருளையே வேண்டிநிற்போமாக.

**இன்பமும் துன்பமும் ஞானிக்கு இல்லை.**

உ



# இந்துமதப்பண்பாட்டில் விநாயக வழிபாட்டின் முக்கியத்துவம்

**திரு T. நாகராசா அவர்கள்**

எமது இந்துமதம் சிந்துவெளியில் ஆரம்பித்து பாரததேசம்மட்டு மன்றித்தென்கிழக்காசிய நாடுகளாகிய இந்தோனேசியாவிலும் கம்போடியா, பர்மா, தாய்லாந்து போன்ற இடங்களிலும் ஜப்பான் இலங்கை போன்ற நாடுகளிலும் வளர்ச்சி கண்டது தற்காலத்தில் அமெரிக்கா போன்ற நாடுகளிலும் வளர்ந்து வருகின்றது. இந்துமதப்பண்பாட்டுடன் விநாயகவழிபாடும் வளர்ச்சி கண்டுள்ளது. பாரததேசத்தில் வளர்ச்சிகண்ட விநாயக வழிபாடு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த வழிபாடாகச் சைவ, வைஷ்ணவ மதத்தினர் மட்டுமன்றிப் பௌத்தமதமும் ஏற்றுக்கொண்டுள்ளது.

மேற்கூறப்பட்ட விநாயகப்பெருமானைச் சாணத்தினால் இலகுவாக அமைக்க முடியும் அத்துடன் அரிசிமா மஞ்சள்மா போன்றவற்றினாலும் அமைக்கமுடியும். மார்கழி மாதத்தில் வரும் பிள்ளையார் கதை முடிந்து சாணத்தினால் உருவாக்கப்பட்ட பிள்ளையாரை புனிதமான கோவிற்குளத்தில் இட்டுக் கரைத்து விடுவார்கள். வீட்டிற்குரிய சம்பிரதாயங்களில் இவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. கனிவுள்ள பக்திகொண்டு திருவடி பணிவோர்க்கு மிக எளியன் கொடியவினை நீக்கி நல்ல அருளினைச் செய்பவன் ஆகிய விநாயகரை எல்லா இந்துமத ஆலயங்களிலும் முக்கியத்துவம் கொடுத்து வழிபாடு செய்வார்கள். தோப்புக்கரணம் போட்டு வழிபடுதல் விநாயக வழிபாட்டில் முக்கிய இடத்தை வகிக்கின்றது. சைவ ஆலயங்களிலும், விஷ்ணு ஆலயங்களிலும் முதல் விண்க்கமோ, பூசையோ விநாயகனுக்குத்தான் நடக்கும்.

ஐந்துகரத்தான், யானைமுகத்தன் இந்தின் இளம்பிறைபோன்ற எயிற்றினன், நந்தி மகன் ஞானக்கொழுந்து ஆகிய இவனைப் புந்தியில் வைத்துப் போற்றுகின்றேன் என்று ஔவையார் பாடுவார். அத்துடன் வாக்குண்டாம் நல்ல மணமுண்டாம் மாமலராள் நோக்குண்டாம் மேனி நுடங்காது பூக்கொண்டு துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம் தப்பாமற் சார்வார் தமக்கு என்றும்

பாலும் தெளிதேனும் பாகும்பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலஞ்செய்
துங்கக்கரிமுகத்துத் தூமணியே நீயெனக்கு
சங்கத்தமிழ் மூன்றும் தா

எனவும் பாடுவார்.

எனவே விநாயகனை வழிபடுதல் மூலம் சர்வகாரியங்களும் சித்திக்கும் என்பர். எனவேதான் எல்லாக் காரியங்களிலும் யானை முகத்தானை வழிபடுவோர்க்கு நேரும் துன்பங்களை உடைக்கும் தயாபரன் விநாயகனாவான். இந்துக்கள் எந்தப்பணியும் செய்வதற்கு முன் கணபதியினை வணங்காமல் தொடங்கமாட்டார்கள். எனவே இந்துப்பண்பாட்டு மரபு இன்று சைவவைஷ்ணவ வழிபாடுகளிலும் இடம்பெறுகின்றது. விநாயகரை கணபதி, விக்கினராஜா, மூஷிகவாகனன் பிள்ளையார் என்று பெயரிட்டு

**அகந்தையைத் துறந்தால் அருளைப் பெறலாம்.**

அழைப்பது வழக்கமாகிவிட்டது.

கணானம் கணபதீம் துவாம்மஹே

விஸி சித்தகணபதே

என்றும் விநாயகனைப்பற்றி இருக்குவேதம் கூறுகின்றது. கணங்களின் தலைவனாகவும் தனக்கு நிகர் எவரும் இல்லாதவர் எனவும், கடைக்கட்பார்வையால் தடைகளை உடைக்கக்கூடியவன் விக்னேஸ்வரப்பெருமானாவார். விநாயகரிடம் அருள்பெற்றவர் ஔவையாராவார். முதலாவதாக ஆதிபகவன் விட்டுச்சென்ற ஔவையைப் பிள்ளையில்லாத பாணன் ஒருவன் எடுத்து வளர்த்தான் ஔவை பருவமடைந்ததும் அவருக்குத் திருமணம் செய்வதற்குப் பெற்றோர்கள் எண்ணினர். ஆனால் ஏற்கனவே விநாயகரின் அருளினைப் பெற்ற ஔவை விநாயகனிடம் கேட்டுக்கொண்டதனால் இளமை நீங்கி முதுமைபெற்றார். தகப்பன், தாய் தன்னை திருமணம் செய்யவந்த மணவாளன் அவர்களது சுற்றத்தாரிடம் சேவையே தனது நோக்கமென்றும் கூறி அவர்களிடமிருந்து விடைபெற்றார் விடைபெற்ற ஔவையார் தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் திரிந்து விநாயகப்பெருமான் கடாட்சத்தால் அளப்பரிய சேவையினைச் செய்தார். உதாரணமாக, பாரி என்ற மன்னனிடம் நீங்காத நட்புப்பூண்டு அவனைப்பற்றிப் பலபாடல்களைப் பாடியுள்ளார். பாரியின் இரண்டு புதல்விகளை திருமணம் செய்து தரவேண்டுமென்று கேட்ட மூவேந்தர்கள் பாரியைச் சூழ்ச்சிசெய்து கொன்றதுடன் அவனின் நாட்டையும் கைப்பற்றினர். நாட்டைவிட்டுத் தப்பியோடிக் காட்டினில் வசித்துவரும் நாளில் ஒருமுறை மழையால் நனைந்து வந்த ஔவையார் இவர்கள் குடிலுக்குச் சென்றபொழுது பாரியின் புதல்விகள் என அறிந்து நடந்தவற்றைக் கேட்டு மனங்கலங்கியதுடன் இவர்களைத் திருமணம் செய்ய இருந்த தெய்வீகனைச் சிறைப்பிடித்து வைத்த மூவேந்தரின் இராச்சியத்திற்கு விநாயகனின் அருள் வேண்டியானைகளை அனுப்பித் தெய்வீகனை மீட்டுத் திருமணத்தை நடாத்திவைத்தார். அத்துடன் மூவேந்தர்களையும் ஒற்றுமைப்படுத்திவைத்தார். இவ்வளப்பரிய செயல்களை விநாயகனின் அருளாலே செய்து முடித்தார் என்றால் மிகையாகாது.

மகாபாரதத்தை வியாசர் சொல்ல விநாயகப்பெருமான் எழுத்தாணியால் எழுதிவந்தார். இடையில், எழுத்தாணி முறிந்துவிடவே தனது ஒற்றைக்கொம்பை முறித்துப் பாரதத்தை எழுதிமுடித்தார். விநாயகனுக்கு சித்தி, புத்தி என்ற இரண்டு மனைவியர் உள். அறிவின் சிகரமாகப் (புத்தியும்) சாதனையின் கொடுமுடியாகச் (சித்தியும்) இருப்பதால் இந்த உருவகம் ஏற்பட்டிருக்கலாம். பூரண ஞானம் பெறுவதற்கு விநாயகனின் அருள் வேண்டுமென்று சொக்குசுப்பிரமணியம் கூறுவார். உலகத்தைச் சுற்றிவருபவர்யாரோ அவருக்குத்தான் மாம்பழம் கொடுக்கப்படுமென்று சிவனும் பார்வதியும் கூறியபொழுது முருகன் மயில்மீது உலகத்தை வலம் வரப்புறப்பட்டார்.

விநாயகர் சிவனையும் பார்வதியையும் வலம் வந்து மாங்கனிபெற்றார். உலகத்தைச் சுற்றிவந்த முருகன் விநாயகனிடம் மாங்கனி இருப்பதைக்கண்டு விசனத்துடன் ஆண்டிக்கோலத்தில் பழநி உறைந்தாரெனப் புராணச்செய்திகள் கூறுகின்றன. இவற்றிலிருந்து பார்க்கும்பொழுது உலகமென்றால் எமது தாயும் தந்தையும் தான் என்ற தத்துவப்பொருள் உணர்த்தப்படுகின்றது. (தொடரும்...

**நன்றாக எழுவதைப் போன்றதே நேர்மை.**

உ

# சந்நிதியான்

திரு ந. அரியரத்தினம் அவர்கள்



ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் தங்கியிருந்த அடியார்கள் உட்பட 25 அன்பர்களுடன் 05.08.2006இல் சந்நிதியில் இருந்து தலயாத்திரைக்காகப் புறப்பட்ட அந்தவாகனம் கதிர்காமத்தை அடைவதற்கு இன்னும் ஒரு சில கிலோமீற்றர்தூரமே இருந்தது. இன்னும் சிறிது நேரத்தில் கதிர்காமக்கந்தனை மனம் குளிர வழிபடப்போகின்றோம் என்ற ஆர்வமும் ஆனந்தமும் மேலோங்க அனைவரும் மிகவும் மகிழ்ச்சியான சூழ்நிலையில் காணப்பட்டனர்.

எப்பொழுதும் சுறுசுறுப்பாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கும் நடுத்தர வயதைத்தாண்டிய அந்தப்பெண் "சரி கதிர்காமம் வரப்போகின்றது எல்லோரும் என்னென்ன நேர்த்திவைத்து கதிர்காமக்கந்தனிடம் வந்தனீங்கள் என்று சொல்லுங்கோ" என தனது உள்ளத்தில் எழுந்த உணர்வை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தினார்கள். இதற்கான பதிலை எவரும் வெளிப்படையாகவும், உடனடியாகவும் கூறுவதில் உள்ள சங்கடத்தை புரிந்துகொண்ட அந்தப்பெண் ஆலயத்

திருப்பணிச்சபையில் கடமையாற்றுபவரும் அனைவருடனும் கலகலப்பாக பழகுபவருமான செல்வறோசா என்ற அந்த இளம் யுவதியை நோக்கி உரிமையுடன் செல்வறோசா நீ என்ன நேர்த்திவைத்து கதிர்காமம் வந்தநீ என்று கேட்டுவிட்டு பதிலுக்காக காத்திருக்காமல் தனது உள்ளத்தின் உணர்வினை உருக்கமாக பின்வருமாறு வெளிப்படுத்தினார்கள் **"இந்தநாட்டில் சண்டை இல்லாமல் எல்லோரும் சந்தோஷமாகவும் நிம்மதியாகவும் வாழவேண்டுமென்பதுதான் எனது விருப்பம் அதைத்தான் கதிர்காமக்கந்தனிடம் நான் வேண்டி வணங்கப்போகின்றேன். எனக்கென்று எதையும் கதிர்காமக்கந்தனிடம் வேண்டி வணங்கமாட்டேன்".**

ஆம்! குடும்பத்தலைவியாக இருக்கின்ற ஒரு சராசரிப் பெண்ணிடமிருந்து இவ்வாறான ஒரு கருத்தோட்டம் வெளிப்பட்டமை அந்தத் தலயாத்திரையில் கலந்து கொண்ட பல பெரியோர்களின் உள்ளத்தைத் தொடுகின்ற ஒரு விடயமாகவே அமைந்திருந்தது.

இவ்வாறான தூய்மையான உள்ளம்கொண்ட இந்த அம்மையாரைப்போன்ற ஆன்மீக உணர்வுள்ளவர்கள் உள்ளத்திலேயே சந்நிதியானும் விரும்பி உறவாடுகின்றான் என்பதை வெளிப்படுத்த இவரது வாழ்வில் இடம்பெற்ற பின்வரும் சம்பமொன்றை அடியார்களுடன் பகிர்ந்துகொள்வது பொருத்தமானதென்று கருதுகின்றோம்.

இந்த அம்மையாரின் பெயர் திருமதி சரசுவதி சங்கரநாதன் சொந்த இடம் கைதடி மத்தி கைதடியாகும். இவரது மகள் சந்நிதிச்சூழலில் திருமணம் செய்த காரணத்தினால் இவரும் தனது மகளுடன் சந்நிதிச்சூழலிலேயே தற்பொழுது வாழ்ந்துகொண்டிருக்கின்றார். கணவன், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் எனக் குடும்பச்சுமை இருந்தாலும் அவை எல்லாவற்றுடனும் சந்நிதியானுக்கும் தொண்டுகள் செய்வதை தனது முக்கிய கடமைகளில் ஒன்றாகக்கருதிச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்.

1996ஆம் ஆண்டு கைதடியில் வசித்துக்கொண்டிருக்கும்பொழுது இவரது வலது காலில் ஏற்பட்ட வீக்கத்திற்கு தனியார் வைத்தியர் ஒருவரிடம் சிகிச்சை பெற்று வந்தார். திடீரென நோய் மோசமடைந்த நிலையில் அவரது உடல்நிலை பாதிப்படைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு சென்று பரிசோதித்தபொழுது அவருக்கு நீரிழிவுநோய் மோசமானநிலையில் காணப்பட்ட அதேநேரம் அவரது வலதுகாலில் முழங்கால்ப்பகுதியில் இருந்த அந்த வீக்கம் மோசமான நிலையில் இருப்பதும் இனம் காணப்பட்டது.

இவரை நன்கு பரிசோதித்த வைத்தியநிபுணர் அவரது வலதுகாலில் முழங்காலுக்கு கீழ் உள்ள பகுதியை சத்திரசிகிச்சை மூலம் நீக்கவேண்டுமென்றும் 3வது நாள் சத்திரசிகிச்சை இடம்பெறும் எனவும் தெரியப்படுத்தினார்.

திருமதி சரசுவதி சங்கரநாதன் அவர்கள் பொறுப்புள்ள குடும்பத்தலைவியாக இருந்து கடமைகளை நிறைவேற்றிவருபவர். அத்துடன் மற்றவர்கள் சந்தோஷமாக இருப்பதற்கு தன்னால் ஆனவற்றை செய்யவேண்டுமென்று நினைத்துச் செயற்படுகின்ற நல்ல உள்ளம் கொண்டவர். இந்தநிலையில் தனது கால் துண்டிக்கப்பட்டு தான் ஊனமான நிலையிலிருந்து மற்றவர்களுக்கு இடைஞ்சலாக வாழ்வதை எள்ளளவும் விரும்பவில்லை.

**மனிதனைக் கெடுப்பது ஆசை, கோபம்.**

குடும்பத்தில் வறுமை, குடும்பச்சுமை என்பன இருந்தும் இன்முகத்துடன் மற்றவர்கள் மகிழ்வாக வாழவேண்டுமென்று நினைக்கின்ற எனக்கு இவ்வாறான துன்பம் ஏற்படுவது முறையா என தான் வழிபடுகின்ற அனைத்துத் தெய்வங்களிடமும் முறையிட்டு மனம் உருகி வழிபாடு செய்யலானார்.

ஏற்கனவே முருகேசுசுவாமிகள் மூலம் சந்நிதியானின் தொடர்புகள் இறுக்கமாக ஏற்பட்டிருந்ததினால் சந்நிதிமுருகனிடம் உரிமையுடன் முறையிட்டு எனது கால் நீக்கப்படுமாயின் நான் இவ்வுலகில் உயிர் வாழ்வது எந்த வகையிலும் தேவையில்லாத ஒன்று என்பதை நீ அறியமாட்டாயா என தனது பக்தியின் மேலீட்டால் சந்நிதியானுக்கு தனது உணர்வை மானசீகமாக வெளிப்படுத்தினார்கள். அதுமட்டுமல்ல நான் ஊனமடைகின்ற நிலை ஏற்படுவதற்கு முன்பே எனது உயிரைப் போக்கிக்கொள்வதே மேலானது என தனக்குள் தீர்க்கமான முடிவினையும் எடுத்துவிட்டார்கள்.

மூன்றுநாள் இடைவெளியில் சத்திரசிகிச்சை செய்வதற்கு நாள் குறித்த நிலையில் வைத்தியசாலையில் அதற்கான முன் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கு வசதியாக அவரது உடல்நிலை தினமும் பரிசோதிக்கப்பட்டு முடிவுகள் அவருக்குரிய நோயாளர் அட்டையில் பதியப்பட்டன. குறிப்பிட்ட இந்த நோயாளரின் நோயாளர் அட்டையை வழமைபோல பார்வையிட்ட வைத்தியநிபுணர் திருமதி சரசுவதி அவர்களின் நோயின் தன்மை ஒவ்வொருநாளும் அதிசயிக்கத்தக்க வகையில் மிகவேகமாக வீழ்ச்சியடைந்து செல்வதை அவதானித்து வியப்படைந்தார். திருமதி சரசுவதி அவர்களின் உடல்நிலை மாற்றமடைந்து செல்வதை நன்கு உணர்ந்து கொண்டவைத்தியநிபுணர் அதனை நோயாளிக்கு தினமும் வெளிப்படுத்தியது மட்டுமல்ல 3ம்நாள் அனைத்து விடயங்களையும் நன்கு பரிசோதித்தபின் திருமதி சரசுவதி அவர்களுக்கு சத்திரசிகிச்சை செய்யத்தேவையில்லை என்ற முடிவை வெளிப்படுத்தினார்கள். அதே நேரம் தன்னால் புரிந்துகொள்ள முடியாதநிலையில் அதிசயமான முறையில் திருமதி சரசுவதி அவர்களுக்கு முன்னேற்றம் ஏற்பட்டதையும் வைத்தியநிபுணர் மனம்திறந்து வெளிப்படுத்தினார்கள்.

தனது கால் ஊனமடைகின்ற ஆபத்திலிருந்து காப்பாற்றப்பட்டது மட்டுமன்றி தற்பொழுது நீரிழிவு நோயிலிருந்து முற்றாகக் குணமடைந்து முழுமையான சுகதேகியாக திருமதி சரசுவதி அவர்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். இவ்வாறு முழுமையான சுகதேகியாக திருமதி சரசுவதி அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஒவ்வொரு நிமிடமும் தான் சந்நிதியானது அடிமை என்ற உணர்வை வெளிப்படுத்தும் வகையில் சந்நிதி ஆலயம் தொடர்பாக அவரது செயற்பாடுகள் அமைந்திருப்பதை அனைவரும் காணமுடியும்.

மடப்பள்ளி வேலைகள், அன்றாட பூசை தொடர்பாக செய்யக்கூடிய சில உதவிகள், அடியார்களுடன் இணைந்து பஜனையில் ஈடுபடுதல் சந்நிதியானை வழிபடவருகின்ற அடியவர்கள் தொடர்பாக நிறைவேற்றவேண்டிய சில கடமைகள் என ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் தொடர்பாக வேண்டிய உதவிகளை வேண்டிய வகையில் வேண்டிய நேரத்தில் இன்முகத்துடன் நிறைவேற்றுகின்ற எல்லோராலும் அறியப்பட்ட ஒரு அம்மையாராக தற்பொழுது திருமதி சரசுவதி செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள்.

**நன்மை என்பது செயலில் காணும் அன்பு.**

கலியுகக்கந்தன் சந்நிதிமுருகன் ஆயிரக்கணக்கான அன்பர்களுக்கு அபயமளித்து அவர்களின் வேண்டுதல்களை நிறைவேற்றுகின்ற அதேநேரம் அவர்களில் ஒருசிலரை தனக்கு அருகாமையில் வைத்து தன்னை தினமும் வழிபாடு செய்து தனக்கு தொண்டுகள் செய்கின்ற பாக்கியசாலிகளாக ஆக்குவதுண்டு. ஆம்! அப்படிப்பட்ட பாக்கியசாலிகளில் ஒருவராக திருமதி சரசுவதி அவர்களும் தற்பொழுது சந்நிதியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

ஓம் முருகா!

## ஊரார் வணங்குவரோ

### காப்பு

நல்லை நகருறையும் நன்முருகா நின்பாதம்
அல்லல் குறைக்க அருள்புரிவாய் எல்லையில்
இன்பம் பெருக்கி இனிதாக உய்யவருள்
என்றும் உனைவணங்க ஏற்று

தொல்லைத் துயர்களையத் தொன்றுதொட்டு வாழ்பவர்கள்
எல்லையில் துன்பமதை எய்துகிறார் வல்லையிது
நின்பிழைப்பு வாருலகில் நிர்மலா வந்தருள
உன்னையே நாடுமிவ் ஊர்

கொட்டடி விட்டகன்றார் கோப்பாய் நிலம்புரளக்
கட்டுடை கட்டுவனாம் கால்புரள விட்டபுரம்
கள்ளியங் காடுறைவோர் காலின்வாய் தாள்தைத்த
முள்ளி யவளையெடு என்று

நல்லூரிற் கூடுபவர் நாவந் துறைநாடுந்
தொல்புரத்துத் தொண்டர் தொடர்பினால் பல்லூரும்
மல்லாகம் கொண்டானை மதவாட்சி செய்தானைப்
பல்லோரும் வாழ்தப் பழிச்சு

(பழிச்சு- வணங்குதல்)

நல்லூர்ப் பிரதட்டை நாவற் குழியாரும்
தெல்லிப் பளைவெல்லந் தேடுவரோ எல்லூரும்
செல்லூர்ந்து வந்து செகத்தில் சொரிந்தகதை
புல்லூர்ந்து போச்சென்று பேசு.

நாலூர் மனிதர்கள் நாடுவரோ பாண்டியன்தாழ்
பாலோடு தீர்த்தம் பருகியிட வேலணையான்
மீசாலை தேரேற மீதூர்ந்த மாதரொடு
பேசாலை சுற்றிவந்த பேறு

*-ஆலையமணியம்-*

**மனநிறைவு என்பது இயற்கையாகவே நம்மிடம் உள்ளசெல்வம்.**

உ

# புரட்டாதிமாத வாராந்த நிகழ்வுகள்

01-09-2006 வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில்

## உற்சவ கால விசேட நிகழ்வு

---

08-09-2006 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## விசேட சொற்பொழிவு

---

15-09-2006 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## பாடசாலை மாணவர்களின் நிகழ்வு

---

22-09-2006 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

**சொற்பொழிவு:-** பெரியபுராணம் (தொடர்)

**வழங்குபவர்:-** அ. குமாரவேல் (சிரேஷ்ட விரிவுரையாளர்)
(யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை)

---

29-09-2006 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஞானச்சுடர் 105ஆவது மாத வெளியீடு புரட்டாதி 2006

**வெளியீட்டுரை:-** இரா ஸ்ரீநடராசா
(ஆசிரியர் யா/ தொண்டைமானாறு வீ.ம. வித்தியாலயம்)

**மதிப்பீட்டுரை:-** துரை. கணேசமூர்த்தி
(ஆசிரியர் யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை)

# செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த நிகழ்வுகள் 2006

**ஏப்ரல்**
01.04.2006 பங்குனி 18 சனி
கார்த்திகை விரதம் விஷேட உற்சவம்
11.04.2006 பங்குனி 28 செவ்வாய்
பங்குனி உத்தரம்
வைரவப் பெருமான் கும்பாபிஷேக தினம்
14.04.2006 சித்திரை 1 வெள்ளி
மங்கள இந்துப் புதுவருடப் பிறப்பு
மாலை விஷேட உற்சவம்
29.04.2006 சித்திரை 16 சனி
கார்த்திகை விரதம் விஷேட உற்சவம்

**மே**
12.05.2006 சித்திரை 29 வெள்ளி
சித்திரா பூரணை விரதம்
26.05.2006 வைகாசி 12 வெள்ளி
கார்த்திகை விரதம் விஷேட உற்சவம்

**ஜூன்**
09.06.2006 வைகாசி 26 வெள்ளி
வைகாசி விசாகம் விஷேட உற்சவம்
22.06.2006 ஆனி 8 வியாழன்
கார்த்திகை விரதம் மாலை 5மணி
விஷேட உற்சவம்

**ஜூலை**
02.07.2006 ஆனி 18 ஞாயிறு
ஆனி உத்தரம் பகல் விஷேட உற்சவம்
03.07.2006 ஆனி 19 திங்கள்
தீர்தமெடுப்பு
10.07.2006 ஆனி 26 திங்கள்
வருடாந்த குளிர்ச்சிப் பொங்கல்
16.07.2006 ஆனி 32 ஞாயிறு
சின்ன ஆண்டியப்பர் பூஜை
20.07.2006 ஆடி 4 வியாழன்
கார்த்திகை விரதம், விஷேட உற்சவம்
24.07.2006 ஆடி 8 திங்கள்
ஆடி அமாவாசை விரதம்
25.07.2006 ஆடி 9 செவ்வாய்
கதிர்காமம் கொடி
28.07.2006 ஆடி 12 வெள்ளி
ஆடிப்பூரம்

**ஆகஸ்ட்**
09.08.2006 ஆடி 24 புதன்
கதிர்காமத் தீர்த்தம்
இரவு விஷேட உற்சவம்
16.08.2006 ஆடி 31 புதன்
கார்த்திகை விரதம் விஷேட உற்சவம்
23.08.2006 ஆவணி 7 புதன்
ஆலய மகோற்சவ ஆரம்பம்
இரவு கொடியேற்றம்
27.08.2006 ஆவணி 11 ஞாயிறு
காலை திருவிழா ஆரம்பம்

**செப்ரெம்பர்**
01.09.2006 ஆவணி 16 வெள்ளி
பூங்காவனம்
02.09.2006 ஆவணி 17 சனி
கைலாசவாகன உற்சவம்
05.09.2006 ஆவணி 20 செவ்வாய்
சப்பறம்
06.09.2006 ஆவணி 21 புதன்
காலை தேர்
7.09.2006 ஆவணி 22 வியாழன்
காலை தீர்த்தம்
மாலை மௌனத்திருவிழா
12.09.2006 ஆவணி 27 செவ்வாய்
கார்த்திகை விரதம் விஷேட உற்சவம்
23.09.2006 புரட்டாதி 7 சனி
நவராத்திரி விரத ஆரம்பம்
29.09.2006 புரட்டாதி 13 வெள்ளி
சரஸ்வதிபூஜை ஆரம்பம்

**ஒக்ரோபர்**
02.10.2006 புரட்டாதி 16 திங்கள்
விஜயதசமி
10.102006 புரட்டாதி 24 செவ்வாய்
கார்த்திகை விரதம் விஷேட உற்சவம்
21.10.2006
ஐப்பசி 04 சனி தீபாவளி
22.10.2006
ஐப்பசி 05 ஞாயிறு கந்த ஷஷ்டி விரதம் ஆரம்பம்
22.10.2006
ஐப்பசி 10 வெள்ளி கந்த ஷஷ்டி விரதம்
மாலை சூரசம்ஹாரம்
28.10.2006 ஐப்பசி 11 சனி
பாரணை இரவு தெய்வானை அம்பாள் திருக்கல்யாணம்

**நவம்பர்**
06.11.2006 ஐப்பசி 20 திங்கள்
கார்த்திகை விரதம் விஷேட உற்சவம்

**டிசம்பர்**
03.12.2006 கார்த்திகை 17 ஞாயிறு
திருக்கார்த்திகை விரதம்
குமாராலய தீபம் இரவு விஷேட உற்சவம்
05.12.2006 கார்த்திகை 19 செவ்வாய் விநாயகர் விரதஆரம்பம்
10.12.2006 மார்கழி 10 உதயம் திருவெம்பாவை பூஜாரம்பம்
விநாயகர் ஷஷ்டி விரதம்
31.12.2006 மார்கழி 16 ஞாயிறு
கார்த்திகை விரதம்
காலை 9.00 மணி விஷேட உற்சவம்

**சுப மங்களம்**
**நன்றி**